பக்கங்கள் : பத்து

Registered as a Newspaper

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நூல் இரவல் நூலகம்.

உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 பங்குனி 5 செவ்வாய்க்கிழமை (18-03-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 111

# வன்னிக்கு உணவுப் பொருள்கள் அனுப்புவதற்கு அரசாங்கம் ஏற்பாடு

## ஒன்றரை மாதங்களின் பின்னர் வியாழனன்று லொறிகள் புறப்பாடு

வவுனியா, மார்ச் 18

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பிரதேசத்துக்கு உணவுப் பொருள்களை அனுப்பி வைக்க முடிவாகியுள்ளது. நாளை மறுதினம் வியாழக்கிழமை தொடக்கம் உணவு லொறிகள் வன்னி நோக்கிப் புறப்படும். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

வன்னிப் பகுதிக்குக் கடந்த ஒன்றரை மாதங்களாக - 45 நாள்களாக - உணவு அனுப்பப்படவில்லை. அதனால் அங்கு பெரும் உணவுத் தட்டுப்பாடும் பஞ்ச நிலையும் உருவாகியுள்ளன.

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப்பகுதிகளுக்கு நிவாரண உணவுப் பொருள்களை அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக வவுனியா அரசாங்க அதிபர் கே. கணேஸ் நேற்றுத் தெரிவித்தார்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு அரச அதிபர் கணேஷ் நேற்று முன்தினம் சென்றிருந்தார். அங்குள்ள லொறி உரிமையாளர்களின் பிரதிநிதிகள் மற்றும் முக்கியஸ்தர்களுடன் அவர் கூட்டம் ஒன்றை நடத்தினார். அக்கூட்டத்தில் உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதில் உண்டான தடங்கலால் உருவாகியுள்ள நெருக்கடி குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

அக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளுடன் வவுனியா திரும்பிய

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 500 பேர் 35 படகுகளில் நேற்று குருநகர் வந்து சேர்ந்தனர்

குருநகர், மார்ச் 18

''சூரியப்பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையின் போது இடம் பெயர்ந்து வன்னியில் வாழ்ந்து வந்தவர்களில் 150 குடும்பங்களைச் சேர்ந்த மேலும் 500 பேர் குடாக்கடல் ஊடாக நேற்றுக் காலை குருநகர் இறங்குதுறையை வந்தடைந்தனர்.

குருநகர், பாசையூர், ஆனைக்கோட்டைப் பகுதிகளைச் சேர்ந்த இவர்கள் இடம் பெயர்ந்து நாச்சிக்குடா, குமுழமுனை, கிராஞ்சி, வலைப்பாடு போன்ற கரையோரக் கிராமங்களில் வாழ்ந்து வந்தனர்.

பெண்கள், குழந்தைகள், வயோதிபர் என 500க்கு மேற்பட்டவர்கள் 35படகுகளில் வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிட்டு நேற்றுக் காலை 7 மணியளவில் குருநகர் இறங்குதுறையை வந்தடைந்தனர்.

தமது உறவினர்கள் வந்துள்ளார்கள் எனக் கேள்வியுற்ற குருநகர், பாசையூர் மக்கள் குருநகர் துறைமுகத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்ப அதிபரின் வாக்குக்கே இந்தக் கதி எண்டால் ..?

## மன்னாரில் தாக்குதல்!

கொழும்பு, மார்ச் 18

மன்னாரில் நேற்று முன்தினம் இடம் பெற்ற சம்பவம் ஒன்றில் ஒரு பொலீஸார் கொல்லப்பட்டார் என்றும் நான்கு பொது மக்கள் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்கள் மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸார் மீது புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் கூறப்பட்டது. (இ-5)

## யாழ். நகருக்குள் வருவதற்கு கூடுதல் பாதைகள் வேண்டும்

### அமெரிக்க அகதிகள்கவுன்ஸில் அரசுக்கு ஆலோசனை

கொழும்பு, மார்ச் 18

''மாணவர்கள், அரச ஊழியர்கள், பொதுமக்கள் யாழ். நகருக்குள் வந்து போக பிரவேசப் பாதைகளை கூடுதலாகத் திறக்க வேண்டும்''

அமெரிக்க அகதிகள் கவுன்ஸில் தனது அறிக்கையில் இலங்கை அரசுக்கு மேற்கண்டவாறு ஆலோசனை வழங்கியுள்ளது.

யாழ். மாவட்டத்தில் மேற்கொண்ட ஆய்வுகளை அடுத்து அந்த அமைப்பு இலங்கை அரசுக்குத் தெரிவித்துள்ள மேலும் சில ஆலோசனைகள் வருமாறு:-

★ யாழ். நகரப்பகுதியில் படையினரின் சோதனை நிலையங்கள் குறைக்கப்பட வேண்டும்.

★ யாழ். நகரசபை நிர்வாகத்தில் பொதுமக்களின்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### ஆள் மாறாட்டம்

## வாக்களிக்கச் சென்ற அதிபருக்கு அதிர்ச்சி

கொழும்பு, மார்ச் 18

உள்ளூராட்சித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்கச் சென்ற கல்லூரி அதிபர் ஒருவர் அதிர்ச்சி அடைந்தார்.

அவரின் பெயரில் ஆள் மாறாட்டம் செய்து வேறொருவர் வாக்களித்திருந்ததே இதற்குக் காரணமாகும்.

கண்டி மாகாண கல்வி அமைச்சில் இச்சம்பவம் இடம்பெற்றது.

கண்டி கம்பளை கனிஷ்ட பாடசாலை அதிபரான டி எம். செனவிரத்தினாவுக்கே இந்தக் கசப்பான அனுபவம் ஏற்பட்டது. இது சம்பந்தமாக அவர் உயர் அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்துள்ளார். (இ-3-150)

## அகதி முகாமில் கடமையில் இருந்த பொலீஸார் மீது கிரனேட் வீச்சு!

### வவுனியாவில் நேற்றுச் சம்பவம்

வவுனியா, மார்ச் 18

வவுனியா ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள அகதி முகாமில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸார் மீது மேற்கொள்ளப்பட்ட கிரனேட் தாக்குதலின்போது பெண் பொலீஸார் இருவர் காயமடைந்தனர்.

ஒரு கிழமைக்குள் அகதி முகாம் பகுதியில் இடம்பெற்ற இரண்டாவது தாக்குதல் இதுவாகும்.

கடந்த வாரம் வவுனியாவில் கலைமகள் அகதி முகாமில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஒரு பொலீஸ்காரர் கொல்லப்பட்டார், மற்றொருவர் காயமடைந்தார். கலைமகள் அகதி முகாமில் சுமார் ஐயாயிரம் அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (இ-5-10)

## துப்பாக்கிச் சூட்டில் மாணவன் மரணம்

### நாச்சிமார்கோயிலடியில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ்ப்பாணம் நாச்சிமார்கோயிலடிச் சந்தியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மாணவன் ஒருவர் உயிரிழந்தார். இருவர் படுகாயமடைந்தனர்.

சண்டிலிப்பாய் தெற்கைச் சேர்ந்த இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரி மாணவனான பாக்கியநாதன் ஐங்கரன் (வயது 18) என்பவரே மரணமானவராவார். சடலத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயம் காணப்பட்டது.

மற்றும் நாச்சிமார்கோயிலடியைச் சேர்ந்த பாலசிங்கம் தனபாலசிங்கம் (வயது 38), வண்ணார் பண்ணையைச்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர்களாக ஐவர் நியமனம்

கொழும்பு, மார்ச் 18

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் உறுப்பினர்களாக ஐந்து பேரை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

மனித உரிமைகள் ஆணைக் குழுவை அமைக்க கடந்த வருடம் ஜூலை மாதம் நாடாளுமன்றம் அங்கீகாரம் வழங்கி இருந்தது.

எனினும் அதற்கான அங்கத்தவர்களை நியமிப்பதில் ஏற்பட்ட காலதாமதத்தால் அது இயங்காதிருந்து வந்தது.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஐவர் குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் ஓ. எஸ். எம். செனவிரத்தினா பணியாற்றுவார்.

குழுவின் ஏனைய உறுப்பினர்களாக ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி திரு நாவுக்கரசு சுந்தரலிங்கம், சவூதி அரேபியாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் யாலிட் யூசுப், சர்வோதய இயக்கத் தலைவர் கலாநிதி ஏ. ரி. ஆரியரத்தின, பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் முன்னாள் தலைவரும், சத்திரசிகிச்சை நிபுணருமான அர்ஜுன அலுவிகார ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவித்தல்

**செல்வச்சந்நிதி**

**சைவத்திரு வே. முருகேசுசுவாமி**

அவர்கள் 17-03-97 திங்கட்கிழமை காலை சிவபதமடைந்தார்.

அன்னாரின் திருத்தேகம் 18-03-97 செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் செல்வச் சந்நிதியில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
செ. மோகனதாஸ் (நிர்வாகி)
சந்நிதியான் ஆச்சிரமம்

(சி-328)

# கண்ணீர் அஞ்சலி

எமது சமாச பணியாளர்
**திருமதி அருளரசி குலசேகரம்**
அவர்களது அன்புத் தந்தையார்
**வித்துவான் பொன் அ. கனகசபை**

அவர்களது மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர், பணியாளர்.
யாழ். மா. வி. உ. ச. நு. ச. சமாசம்.

(சி/330)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் உப அதிபர்
**திருமதி ஜெயப்பிரகாசம்** அவர்களின் தந்தை
**திரு. இ. பெனடிக்ற்**

அவர்கள் காலமானதையிட்டு, அவரது குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவரது ஆன்மா சாந்தியடைவதாக.

யா/திருக்குடும்பக் கன்னியர் மட
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
ஊழியர்கள்.

(45861)

# கண்ணீர் அஞ்சலி

## வித்துவான் பொன் அ.கனகசபை

(ஆசிரியர், முன்னாள் வைத்தீஸ்வர வித்தியாலயம், புங்குடுதீவு மகாவித்தியாலயம்)

புங்குடுதீவு மேற்கு பெருங்காடு அருள்தரு ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயத்தின் வளர்ச்சிப்படிக்கற்களாக அரும்பணியாற்றி இறைவனை மெய்அன்போடு பூசித்த சிவச் செல்வரின் துயரச் செய்தி கேட்டு ஆறாத்துயருற்ற நாங்கள், அருள்தரு ஸ்ரீ மீனாட்சி அம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வர சுவாமிகளின் கமலப்பாதாரவிந்தங்களில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்துக் கொண்டு அடியாரின் குடும்பத்தினருக்கும் எங்கள் அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

''ஓம் சாந்தி''

அருள்தரு ஸ்ரீ மீனாட்சி அம்பாள்
சமேத சோமசுந்தரேஸ்வர சுவாமி (சிவன்)
தேவஸ்தானத்தினர்,
ஸ்ரீனிவாஷ நாகேந்திரக்குருக்களும்
பாரியாரும்,

(9398)

# 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

மலர்வு: 02 — 06 — 1952



உதிர்வு: 16 — 02 — 1997

## கணபதிப்பிள்ளை பத்மநாதன்

(கிராம அலுவலர், பளை நகரம், தலைவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கக் கிளை - பளை)

பண்புடனும் அன்புடனும் வழிநடத்திய தலைவா! நின் தலைமையை இழந்து தவிக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

நிர்வாக சபை உறுப்பினர்கள், தொண்டர்கள்
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
பளைக் கிளை.

(சி/323)

# சமய சந்நிதிகளில்

சுன்னாகம் ஸ்ரீ ஐயனார் ஆலய வருடாந்த உற்சவத்தின் வசந்தோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை நடைபெறவுள்ளது. (ஐ-30)

★ ★ ★

நுணாவில் ஸ்ரீ வைரவர்—முருகன் கோயில் உற்சவத்தின் 4 ஆம் திருவிழாவான இன்று மாலை 4.30 மணிக்கு நுணாவில் இந்து இளைஞர் மன்றத்தின் சார்பில் நடைபெறும் நிகழ்வுகளில் செல்வி பொ.சிந்துஜா சொற்பொழிவாற்றுவார். (ஐ-30)

★ ★ ★

இணுவில் கிழக்கு ஸ்ரீ சிவகாமி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் கைலாய வாகனத் திருவிழா நாளை புதன்கிழமை மாலை நடைபெறவுள்ளது. (ஐ-30)

★ ★ ★

நீராவியடி தோப்பு ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவத்தின் வேட்டைத் திருவிழா நாளை பிற்பகல் 2 மணி முதல் நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

புலோலி புனித சூசையப்பர் ஆலய வருடாந்த திருவிழா நாளை புதன்கிழமை பருத்தித்துறை பங்குத் தந்தை அருட்திரு பி. எம். இம்மானுவேல் தலைமையில் நடைபெறும்.

(ஐ-30)

★ ★ ★

பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் தென்மராட்சி, பச்சிலைப்பள்ளிப் பகுதிகளில் உள்ள பல ஆலயங்களிலும் நடைபெறுகின்றன.

சாவகச்சேரி நுணாவிற்குளம் கண்ணகை அம்மன் கோயில், மீசாலை மண்டுவில் கண்ணகை அம்மன் கோயில் வேம்போடுகேணி நவினவெளி கண்ணகை அம்பாள் ஆலயம், எழுதுமட்டுவாள் விழுவளை கண்ணகை அம்பாள் ஆலயம், வரணி சுட்டிபுரம் கண்ணகை அம்பாள் ஆலயம், இத்தாவில் மொண்டுவான் வைரவர் ஆலயம், சாவகச்சேரி ஞான வீரபத்திரர் ஆலயம் ஆகியவற்றில் நேற்று ஆரம்பமான பொங்கல் உற்சவம் தொடர்ந்து பங்குனித் திங்கள் தோறும் நடைபெறும்.

(ஐ-117)

★ ★ ★

சாவகச்சேரி வாரிவன ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான இலட்சார்ச்சனையும் விசேட சக்திஹோமமும் நாளை புதன்கிழமை ஆரம்பித்து எதிர்வரும் 23 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை பங்குனி உத்தர தினத்தன்று முடிவுறும்.

(ஐ-117)

★ ★ ★

சாவகச்சேரி நுணாவில் கிழக்கு கந்தசாமி ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. மார்ச் 23 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் இடம்பெறும்

. (ஐ-117)

## பரீட்சை திணைக்கள பணிகள் பாதிப்பு

கொழும்பு, மார்ச் 18

அரசாங்க ஊழியர்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவுகள் மட்டுப்படுத்தப்பட்டதையடுத்துப் பரீட்சைமுடிவுகளை வெளியிடுவது மற்றும் பரீட்சைகளை நடத்துவது தொடர்பான பணிகள் சுமார் 50 வீதம் [illegible] [illegible]சைத்திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(ஐ-10)

# ஆனந்தம் சீயாக்காய்ப்பவுடர்

சிரசின் தனித்துவத்தைப் பேணுவதற்கு; பேன், சொடுகு வராது தடுப்பதற்கு, கேசம் பட்டுப்போல் மிளிர்வதற்கு, கேசம் உதிர்வதைத் தடுப்பதற்கு, கேசத்தை குளிர்ச்சியூட்டுவதற்கு தேவையான மூலிகைகளுடன் சீயாக்காய் சேர்த்து தயாரிக்க

சித்த வைத்திய கலாநிதி
**K. T. S. சபாநாதன்**
அவர்கள் வழங்கிய
ஆலோசனையின் படி தயாரிக்கப் பெற்றது.

**ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர்**
கேட்டு வாங்கிப் பயன் பெறுங்கள்.

தயாரிப்பாளர்:
**ஸ்ரீ சச்சிதானந்த என்ரபிறைசஸ்,**
ஆசிரமம் அருகாமை, கைதடி.

(சி/ 327)

# மரண அறிவித்தல்கள்

## இ. பொ. சுப்பிரமணியம் (புறாடி)

சுழிபுரம் கிழக்கு செருக்கல்புலத்தை (பனிப்புலம்) சேர்ந்த இ. பொ. சுப்பிரமணியம் (புறாடி) நேற்று 17 - 03 – 97 இல் அகாலமரணமானார்.

இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும், கு. வி. கந்தசாமியின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று 17-03-97 அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சம்பில்துறை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
கு. வி. கந்தசாமி
(மைத்துனர்)

செருக்கல்புலம் (பனிப்புலம்)
சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.

(45862)

## சீனியப்பா செல்வரத்தினம்

ஈவினையில் வசித்தவராகிய சீனியப்பா செல்வரத்தினம் 17-03–97 திங்கட்கிழமை காலமானார்.

இவர் பூமணியின் அன்புக் கணவரும், சண்முகம் பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்), இராசரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியர்) ஆகியோரின் சகோதரரும், பெரியதம்பி, இராசரத்தினம், நாகரத்தினம், பொன்னம்மா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-3-97) செவ்வாய்க்கிழமை நண்பகல் 1.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புன்னாலைக் கட்டுவன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கு அறியத்தருகின்றேன்.

தகவல்:
S. சண்முகம்பிள்ளை
(இளைப்பாறிய ஆசிரியர்)

ஈவினை,
புன்னாலைக் கட்டுவன்,
வடக்கு.

(45863)

## ஆறுமுகம் மகாலிங்கம்

(நாடக நடிகரும், விவசாய மன்னரும்)

கோவிற்கடவை, துன்னாலை மத்தி கரவெட்டியைச் சேர்ந்த ஆறுமுகம் மகாலிங்கம் ஞாயிற்றுக்கிழமை 16 – 03 - 97 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி ஆறுமுகத்தின் அன்பு மகனும், திருமதி சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், சந்திரவிம்பம், புஸ்பலிங்கம் (இ. மி. சபை), சந்திரவதனம், சந்திராதேவி, புஸ்பவதி, புவனலிங்கம் (கனடா), மதனலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி புஸ்பலிங்கம் (ஆசிரியை), ஈஸ்வரபாதம், கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற சதானந்தன் மற்றும் வைஜெந்தி, புஸ்பலதா ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவபாதசுந்தரத்தின் (ஓய்வுபெற்ற பதிவாளர்) அருமை மைத்துனரும், சோதீஸ்வரி, கங்காதரன், கங்கேஸ்வரன் (யாழ். பல்கலைக்கழகம்), கமலதாசன், யாழினி, தர்சினி, கௌசல்யா, கண்ணதாசன், காண்டீபன், கவிதா, பிரதீபன், மாதங்கி, மீரா, கஸ்தூரி ஆகியோரின் அன்புப் பேரனாரும், சந்திரிகா, அருண், யாதவன் ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (17–03–97) நடைபெற்றன. இந்தறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. கங்கேஸ்வரன்
(பேரன்)

கோவிற்கடவை,
துன்னாலை மத்தி,
கரவெட்டி.

(45851)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம்

# ஹெல்சிங்கி மாநாட்டுக்கு கிளின்ரன் சக்கர நாற்காலியில் செல்வாரா?

## கூட்டம் ஒருநாள் ஒத்திவைப்பு



வாஷிங்டன், மார்ச் 18

ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்சினின் நீண்டகால நோய்காரணமாகப் பல முறை பிற்போடப்பட்ட ஹெல்சிங்கி உச்சிமகா நாடு இம்முறை அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனின் கால்முட்டு உடைவு காரணமாக ஒரு நாள் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அறுவைச் சிகிச்சை முடிவடைந்து மருத்துவ மனையிலிருந்து கடந்த ஞாயிறன்று வெளியேறிய கிளின்ரனுக்கு ஓய்வெடுக்க அந்த ஒரு நாள் உதவியாக இருக்கும்.

ஹெல்சிங்கி மகாநாட்டுக்கு அதிபர் கிளின்ரன் சக்கர நாற்காலியில் அல்லது தடிகளை ஊன்றிக்கொண்டு செல்வார் என வெள்ளைமாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பின்லாந்து தலைநகர் ஹெல்சிங்கியில் இந்த மாநாடு எதிர்வரும் வியாழன், வெள்ளி ஆகிய இருதினங்கள் நடைபெறும். (ஐ-10)

# ‘அமாறு’ போராளிகளைப் பிடிக்க படைகள் காடுகளில் இறங்கின

## பேச்சுவார்த்தைக்குப் புறம்பான நடவடிக்கை

லீமா, மார்ச் 18

லீமாவில் உள்ள ஜப்பானியத் தூதரகத்தில் பணயம் வைக்கப்பட்டுள்ள 72 கைதிகளையும் விடுவிக்க ‘‘துபக் அமாறு’’ போராளிகளுடன் பேச்சு நடத்திவரும் பெரு அரசு —

‘‘துபக் அமாறு’’ இடதுசாரிப் போராளிகளைத் தேடிப் பிடிக்கும் நடவடிக்கையை பெரு காடுகளில் ஆரம்பித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

சுமார் 500 இராணுவ கொமாண்டோக்கள் பெருவில் உள்ள அமேசன் காடுகளில் போராளிகளைத் தேடும் பணியை ஆரம்பித்துள்ளனர்.

ஹெலிகள் மூலம் துருப்புக்கள் காடுகளில் இறக்கி விடப்பட்டுள்ளன.

அரசின் இந்த நடவடிக்கை பணயக் கைதிகள் தொடர்பாக இடம் பெற்றுவரும் பேச்சு வார்த்தைகளுக்கு உதவ மாட்டாது என்று ‘‘துபக் அமாறு’’ போராளிகள் தெரிவித்துள்ளனர்.

நூறு நாள்களை எட்டியுள்ள இந்தப் பணயக் கைதிகள் விவகாரத்தை முடிவுக்கு கொண்டு வரும் சமரச முயற்சிகள் வேகம் குன்றிப் பின்னடைவை சந்தித்து வருகின்றன.

சமாதானப் பேச்சுக்களை ஒருபுறம் நடத்திக் கொண்டு மறுபக்கத்தில் இராணுவ நடவடிக்கை ஒன்றுக்கான திட்டத்தை ஜனாதிபதி பிஜிமோறி தீட்டிவருகிறார் எனத் தெரிவித்து சமாதானப் பேச்சுக்களில் இருந்து ‘அமாறு’ போராளிகள் இம்மாத ஆரம்பத்தில் பின்வாங்கியமை தெரிந்ததே. (ஐ-10)

# அல்பேனிய அதிபர் பொரிஷா உடன் பதவி விலக வேண்டும்

## விடுவிக்கப்பட்ட முன்னாள் அதிபர் வற்புறுத்து

ரிரானா, மார்ச் 18

ஊழல் குற்றச்சாட்டின் பேரில் 12 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு கடந்த நான்கு ஆண்டுகளாக சிறையிலிருந்த அல்பேனியாவின் முன்னாள் பிரதமரும் எதிர்க்கட்சியான சோசலிஷக் கட்சியின் தலைவருமான பற்றஸ் நானோ கடந்த ஞாயிறன்று விடுவிக்கப்பட்டார்.

அல்பேனியாவில் சுமுக நிலை ஏற்படவேண்டுமாயின் அதிபர் சாலிபொரிஷா ராஜினாமாச் செய்யவேண்டுமெனவும் பஸ்கின் பீனா தலைமையிலான இடைக்கால புதிய அரசுக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

‘‘ஒரு அல்பேனியப் பிரஜை என்ற முறையில் மட்டும் அதிபர் பொரிஷாவுடன் கை குலுக்கத் தயாராயிருக்கிறேன்; ஆனால் அவர் பதவியிலிருந்து விலகி நாட்டில் சுமுகமான நிலைமையை உருவாக்க வழிவகுக்க வேண்டும்’’ என்றும் அவர் தெரிவித்தார்.

### இத்தாலி நோக்கி அகதிகள் ஓட்டம்

இதே வேளை —

அல்பேனியாவின் துறைமுகமான டெறிஸ்சில் பல ஆயிரக்கணக்கான அல்பேனிய மக்கள் துறைமுகத்தை நோக்கி வரும் படகுகளை எதிர்பார்த்து காத்திருப்பதாகவும் ஏதாவது படகு கரையை அடைந்ததும் முண்டியடித்து அதில் ஏறி இத்தாலிக்குத் தப்பிச் செல்லும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப் படுகிறது: (ஐ-10)

# மேயரின் செல்வாக்கு சரிகிறது

லண்டன், மார்ச் 18

பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேயரின் செல்வாக்கு சரிந்து வருகிறது என மக்கள் கருத்துக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன.

மே மாதம் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலுக்கு முன்பு அவர் தனதும் தனது கட்சியினதும் செல்வாக்கினை உயர்த்தியாக வேண்டிய நிர்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளார்.

எனவே எதிர்கட்சியான தொழிற்கட்சி நிறுத்தவுள்ள வேட்பாளர் ரொனிபிளேயருக்கும் ஜோன் மேஜருக்கும் இடையே பொது விவாதங்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு அவை தொலைக் காட்சியில் ஒளிபரப்பாக உள்ளன.

எதிர்க்கட்சி விடுத்துள்ள பொது விவாதத்திற்கான சவாலை ஜோன்மேயர் ஏற்றுக்கொண்டுள்ளார். (ஐ-10)

★ ஐரோப்பிய ஒன்றியத்தின்

# பொலீஸ்-இராணுவ ஆலோசனைக் குழு!

## அல்பேனியா செல்லும்

ரிரானா, மார்ச் 18

அல்பேனியாவில் சட்டம் ஒழுங்கை மீண்டும் நிலை நாட்ட உதவுவதற்காக பொலீஸ் மற்றும் இராணுவ ஆலோசகர்கள் அடங்கிய குழு ஒன்றை அங்கு அனுப்பிவைக்க ஐரோப்பிய ஒன்றியம் முடிவு செய்துள்ளது.

நெதர்லாந்தில் நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார அமைச்சர்களின் கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அல்பேனியாவுக்கு அனுப்பப்படவுள்ள இந்த ஆலோசனைக் குழுவில் சுமார் 100 பேர் அங்கம் வகிப்பர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தங்கள் நாட்டை மீண்டும் அமைதி ஒழுங்குடன் கட்டியெழுப்பும் பொறுப்பை அல்பேனியர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் கோரியுள்ளது.

# அல்பேனிய அதிபரின் பிள்ளைகள் இத்தாலிக்குத் தப்பிச் சென்றனர்

அல்பேனியாவில் உள்நாட்டு நிலைமைகள் மோசமடைந்து விட்ட நிலையிலும் பதவியில் இருந்து விலக மறுத்து வரும் அதிபர் சாலி பொரிஷாவின் இரண்டு பிள்ளைகளும் இத்தாலிக்கு அனுப்பப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சுமார் 20 வயது மதிக்கத்தக்க ஒரு பெண்ணும், ஆண் ஒருவரும் பலத்த பாதுகாப்புடன் மெய்பாதுகாவலர்கள் சகிதம் கப்பலில் ஏற்றப்பட்டதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

தாம் தாய்நாட்டை விட்டுத் தப்பியோடப்போவதில்லை என்று அதிபர் சாலி பொரிஷா தெரிவித்திருப்பது தெரிந்ததே. (ஐ)

# ஹுசேய்னின் வேண்டுகோளையும் இஸ்ரேல் பிரதமர் நிராகரித்தார்

## கட்டுமானப்பணி இவ்வாரம் தொடங்கும்

ரெல் அவிவ், மார்ச் 18

கிழக்கு ஜெருஸலேமில் யூதக்குடியிருப்புகளை அமைக்கும் திட்டத்தைக் கைவிடுமாறு ஜோர்தான் மன்னர் ஹுசேய்ன் விடுத்த வேண்டுகோளையும் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நத்தனியாகு நிராகரித்து விட்டார்.

குடியிருப்புக் கட்டுமானப் பணி திட்டமிட்டவாறு இவ்வாரம் ஆரம்பமாகும் என்று அவர் தெரிவித்து விட்டார்.

ஜோர்தானிய சிப்பாய் ஒருவரினால் சுட்டுக்கொலை செய்யப்பட்ட 7 இஸ்ரேலிய மாணவியரின் உறவினர்களைச் சந்தித்து ஆறுதல் கூறுவதற்காக இஸ்ரேலுக்கு விஜயம் செய்த மன்னர் ஹுசேய்ன் அங்கு பிரதமர் நத்தனியாகுவையும் சந்தித்தார்.

ஜோர்தான் மன்னருடன் இணைந்து செய்தியாளர் கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் நத்தனியாகு —

யூதக்குடியிருப்பு கட்டுமானப்பணி திட்டமிட்டவாறு இவ்வாரம் ஆரம்பமாகும் என்று அறிவித்தார். (ஐ)

# உலக அரங்கில்

## விவசாயிகள் மிரட்டல்

தாஜ்மஹாலுக்கு அருகில் சுவீகரிக்கப்பட்ட தங்களது நிலங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படாவிட்டால் தீமூட்டித் தற்கொலை செய்து கொள்ளப் போவதாக இந்திய விவசாயிகள் ஐவர் எச்சரித்துள்ளனர்.

எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவிருக்கும் இசை நிகழ்ச்சி ஒன்றுக்காக இந்த விவசாயிகளின் காணி சுவீகரிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அணுக்கழிவுடன் வரும் கப்பலை தடுக்க ஜப்பானில் முயற்சி

ரோக்கியோ. மார்ச் 18

பக்குவப்படுத்தப்பட்ட அணுசக்திக் கழிவுகளை பிரான்ஸில் இருந்து ஏற்றிக்கொண்டு ஜப்பானியத் துறைமுகம் ஒன்றை நோக்கி வரும் கப்பலை எதிர்ப்பதற்காக ஜப்பானின் அணுசக்தி எதிர்ப்பு அணியினர் அந்தத் துறைமுகத்தில் திரண்டுள்ளனர்.

ரோக்கியோவுக்கு வடகிழக்கில் சுமார் 600 கிலோமீற்றர் தொலைவில் உள்ள இந்த துறைமுகத்தில் அந்தக் கப்பல் நங்கூரமிடப்பட உள்ளது.

கடந்த செவ்வாயன்று ஜப்பானில் அணுசோதனைக் கூடத்தில் ஏற்பட்ட விபத்தில் 37 தொழிலாளர்கள் கதிர்வீச்சுப் பாதிப்புக்கு இலக்காகியமை தெரிந்ததே. (ஐ)

# பாங்கொக்கில் ஆர்ப்பாட்டம்

பாங்கொக், மார்ச் 18

மீனவர்கள், விவசாயிகள் மற்றும் கூலித் தொழிலாளர்கள் சுமார் இருபதாயிரம் பேர் திரண்டு தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் சமூக நீதியும் சமவாய்ப்புக்களும் வழங்கக்கோரி கடந்த ஞாயிறன்று பேரணி நடத்தினர்.

‘ஏழைகளின் கூட்டமைப்பு’ என்ற அமைப்பு இந்தப் பேரணிக்கு ஒழுங்கு செய்திருந்தது. (ஐ-10)

# கொல்லப்பட்ட சகாவின் உடலுடன் அல்பேனியப் பொலீஸார் பேரணி

## பெரும் அநீதி எனக் கோஷம்!

கிளர்ச்சியாளர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட தங்கள் சகா ஒருவரின் உடலைத் தாங்கியவாறு அல்போனியப் பொலீஸார் தலைநகர் ரிரானாவில் ஊர்வலங்களை நடத்தியுள்ளனர்.

‘‘இந்த மனிதன் யாருக்கும் தீமை செய்யாதவன்; இவனுக்கு யார் நீதி வழங்கப் போகிறார்கள்’’ என்று பொலீஸார் கோஷமிட்டனர்.

ரிரானாவில் வாகனம் ஒன்றை நிறுத்திச் சோதனையிட முயன்ற வேளை வாகனத்துள் இருந்த கிளர்ச்சியாளர் ஒருவரினால் இந்தப் பொலீஸ்காரர் சுட்டுக் கொல்லப்பட்டார். (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கூரை ஓடு 50 விற்பனைக் குண்டு. ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (வண்ணை சிவன் சந்தி) (45858)

வீட்டுத் தளபாடங்கள், மின்சார உபகரணங்கள் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தினங்களில் பார்வையிடலாம்' தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: செ. நாகேந்திரன், 'நேசவாசம்' புத்தூர்ச்சந்தி, மீசாலை. (45856)

### பஞ்சாங்கம்

1997 — 98 ஆம் ஆண்டுக்கான ஈசுவர வருஷ திருக்கணித பஞ்சாங்கம் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக சாலை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி/308)

### ஜோதிடம்

எத்தகையதீராத பிரச்சினைகளும் தீர ஆலோசனை வழங்கப்படும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். சாதகத்துடன் வரவும். பொய்யா மொழி ஜோதிடம், ஸ்ரீவீரமாகாளிஅம்மன் கோயிலடி 140, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (45782)

### கோழிக்குஞ்சு

ஒரு மாதம் நிரம்பிய, பீறீமா லோமன் பேட்டுக் கோழிக்குஞ்சு விற்பனைக் குண்டு. வெள்ளைக்குஞ்சு 110/-, சிவப்புக்குஞ்சு 120/- தொகையாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவுண்டு, R.S.K. கோழிப் பண்ணை, முருகபதி, உடுவில், சுன்னாகம். (உடுவில் மான்ஸ் பாடசாலை வீதி). (45352)

### விண்ணப்பப் படிவம்

க. பொ. த உயர்தரப் பரீட்சைக்கான படிவம் பெற விரும்புவோர் ரூபா 5/- பெறுமதியான முத்திரையும் சுயவிலாசம் எழுதிய நீண்ட தபாலுறையும் அனுப்பவும். தொடர்பு; நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய். (45848)

### ஆங்கிலக்கல்வி

ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 4 வரையிலான ஆங்கிலம் (English Medium 4 P. M.) ஆசிரியர் த. விக்னேஸ்வரன் ஆச்சாரி, இல. 426, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், வண்ணை சிவன் சந்தி. (45857)

## நிதி ஒதுக்கீடு

பருத்தித்துறை, மார்ச் 18 வடமராட்சி வடக்கில் பொலிகண்டி, ஆத்தியடி ஆகிய இடங்களில் உள்ள இரு முன்பள்ளிப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கென தலா 5 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (ஐ-118)

## வைத்தியம்

செங்கமாரி, அல்சர் ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலைகாலவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூல வியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர்; சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்!

**வேலணை**
**வைத்திய கலாநிதி,**
**சி. இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
(45586)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை முன்னாள் அதிபர்

### அமரர் அப்பச்சி மகாலிங்கம்

அவர்களின் மறைவையொட்டி அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள்,**
**மாணவர்கள், பழையமாணவர்கள்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள்.**

**யா/ஆனைக்கோட்டை**
**பாலசுப்பிரமணிய வித்தியாலயம்.**
**ஆனைக்கோட்டை.** (45840)

## 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



உதிப்பு: 02 — 06 — 1952

உதிர்வு: 16 — 02 — 1997

### கணபதிப்பிள்ளை பத்மநாதன்

(கிராம அலுவலர் - பளை நகரம்)

மக்கள் தொண்டினை சேவையாக கருதி
திக்கெல்லாம் நின்பணியை சிறப்பாக ஆற்றி
பக்கம் சாயாமல் பொறுப்புடன் நடந்து
ஏக்கம் கொள்ள வைத்து எங்கு சென்றீர் ஐயா?

உதவியின்றி இப்பிரிவு நாடிவந்த மக்களை
தகுதி பாராமல் தயக்கமின்றி நீயணைத்து
பதவி மறந்து தொண்டனாக செய்த பணியின்
மிகுதியை இனிமேல் யார் செய்வது ஐயா?

கிராமத் தலைவனை இழந்து வாடி நிற்கும்
பிரதேச மக்களின் கண்ணீரையும்
குடும்பத் தலைவனை இழந்து தவிக்கும் உன்
உறவு மக்களின் சோகத்தையும் போக்குவது
யார் ஐயா

நின் பிரிவால் தவிக்கும் அனைவருடன்
எமது கண்ணீர் அஞ்சலியையும்
காணிக்கையாக்குகின்றோம்.

**சங்க அங்கத்தவர்கள்,**
**பணிப்பாளர்கள், பணியாளர்கள்.**
**பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**பளை.**

(சி/305)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு: 30 — 11 — 1955

உதிர்வு: 16 — 02 — 1997

### திருமதி இராஜ்குமார் மகேஸ்வரி

எமது அன்பிற்கினிய அன்னை அணைந்தவேளை உடன் வந்து உதவி நல்கிய அயலவர்கள், உறவினர்கள், நண்பர்களுக்கும் என் மனைவியின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தியும், மலர் வளையங்கள் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தியும், எமது துயரில் பங்கு கொண்டு ஆறுதல் அளித்த யா/விடத்தல் பளை கமலாசினி வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து ஆத்ம சாந்திக்காக வேண்டிக் கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (18-03-97) நிகழும் அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனைகளிலும் தவறாது கலந்து ஆன்ம சாந்தி வேண்டி பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்களை பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:

**J. விமலன் இராஜ்குமார்,**
**பிள்ளைகள்**

விடத்தல் பளை,
மிருசுவில்.
(45797)

## யாழ்ப்பாண மாநகரசபை


## பொது அறிவித்தல்

எம்மால் ஏற்கனவே 11-02-97 ஆம் திகதி பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்ட யாழ்ப்பாண மாநகரசபைக்கு சொந்தமான நவீனசந்தைக் கடைகளையும், ஏனைய கடைகளையும் கேள்வி அடிப்படையில் வாடகை உரிமையாக பெற்றுக் கொண்டவர்கள், தமது வாடகை உரிமையை உறுதிப்படுத்தும் நோக்கமாக தற்போதைய வதிவிட முகவரியை 'அறிவிக்கும் கால எல்லை 30-06-97 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

**மாநகர ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம்.**

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
1997 - 03 - 14 (சி-322)

## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு: 14 — 08 — 1926

உதிர்வு: 09 — 04 — 1995

### அமரர் சடையர் ஆறுமுகம்

திதி: 18 - 03 - 1997

அன்பை அருவியாக்கி
பண்பை சிகரமாக்கி
பலரும் போற்ற பாசமுடன் வாழ்ந்து எம்மை
பாதியிலே விட்டுச் சென்றதேனோ?

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கும்:

**குடும்பத்தினர்**

''பூவோடை'',
கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை. (9391)

## 6 ஆம் மாத நினைவலைகள்



### அமரர் கார்த்திகேசு செல்லத்தம்பி

(சாரதி, பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்)

மலர்வு: **16—07—1938**

உதிர்வு: **21—10—1996**

அன்னாரின் 6 ஆம் மாத கிரியைகள் இன்று (18-03-97) செவ்வாய்க்கிழமை இல. 4, றக்கா வீதி, சுண்டுக்குளியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் மேற்படி கிரியையிலும், மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் இறுதிக்கிரியையில் பங்கு பற்றி உதவிகள் செய்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:

**மனைவி, பிள்ளைகள்.**

இல. 4, றக்கா வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். [9393]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

# றுகுணு பகுதி வரை யுத்தம் வந்துவிட்டது!

## தடுத்து நிறுத்த அரசுக்கு யோசனை

கொழும்பு, மார்ச் 18

துட்டகெமுனு ஆட்சி செலுத்திய சிங்கள மக்களின் பாரம்பரிய பிரதேசமான றுகுணு பகுதிக்குள் தற்போது போர்முனை திறக்கப்பட்டுவிட்டது; இதைத் தடுத்து நிறுத்திட 5 ஆயிரம் பேர் கொண்ட விசேட படையணி உடன் அமைக்கப்பட வேண்டும்,

இவ்வாறு அரசுக்கு ஆலோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

'த ஐலண்ட்' பத்திரிகையின் ஞாயிறு பதிப்பில் றோகண அபயவர்த்தன என்பவர் எழுதியுள்ள கட்டுரை ஒன்றிலேயே அரசுக்கு இந்த ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது.

றுகுணு பிரதேசத்தில் அமைந்துள்ள யால சரணாலயப் பகுதியில் புதிய போர்முனை திறக்கப்பட்டுள்ளது.

மக்கள் அங்கு செல்லமுடியாது. மிதிவெடிகள் எங்கும் நாட்டப்பட்டுள்ளன.

யாலவில் நிரந்தர இராணுவ முகாம் அமைக்கும்படி மக்கள் கோருகின்றனர். பட்டளம்கல, ஹில்வெவ ஆகிய இடங்களில் மட்டும் சிறிய தொண்டர் படை முகாம்கள் உள்ளன.

'ஜொனி' மிதிவெடிகள் அங்கு ஏற்கனவே வந்துவிட்டன.

வரகௌ, புராணதொட்டுப்புல பகுதிகளில் இராணுவ முகாம்களை அமைக்கும்படி வண. இரத்தினஜோதி நாயக்க தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாலவில் நடக்கும் வன் செயல்களுக்கு புலிகள் காரணம் இல்லை என்று பதில் கூறப்பட்டது.

றுகுணு எதிர்கொள்ளும் இந்த அபாயம் குறித்து இவ்வாரம் மக்களும், இராணுவத்தினரும் கூட்டாக இணைந்து ஆராய்ந்து எதிர்கால நடவடிக்கைகள் பற்றி முடிவு செய்யவுள்ளனர்.

துட்டகெமுனுவின் பிரதேசத்தை பாதுகாக்க 5 ஆயிரம் பேர் கொண்ட விசேட படையணி உடன் தேவை. இதுவே அப்பகுதி மக்களிடையே தற்போது பேசப்படும் முக்கிய விடயமாகும் — என்று கட்டுரையாளர் தெரிவித்துள்ளார். (ஐ-3-150)

## தேர்தல் தினத்துக்குமுன் பரபரப்பான அறிவிப்பு?

உள்ளூராட்சித் தேர்தல் தினத்துக்கு முதல் வரும் நாள்களில் ஆளுந்தரப்பு பரபரப்பான அறிவிப்பு ஒன்றை வெளியிடும் என எதிர்பார்க்கப்படுவதாக 'சியரட்ட' என்ற சிங்களப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மக்கள் மனதை வெல்லும் வகையில் இந்த அறிவிப்பு இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கு — கிழக்கு யுத்தம் தொடர்பாகவும், விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் தொடர்பாகவும் அந்த அறிவிப்பு இருக்கக் கூடும் எனக் கொழும்பு வட்டாரங்களில் ஊகம் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை யுத்தத்தில் வெற்றி கொண்டு, இனப் பிரச்சினை விடயத்தில் அவரை மூலையில் ஒதுக்கி விட்டோம் என்ற பாணியில் அந்த அறிவிப்பு வரலாம் என மற்றொரு தகவல் தெரிவித்தது. (உ-3-150)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு: 26 — 12 — 1935



உதிர்வு: 17 — 02 — 1997

### திருமதி இராமலிங்கம் பரமேஸ்வரி

(புஸ்பராணி)

(இளைப்பாறிய ஆசிரியை)

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து எம்மை அன்போடும், பண்போடும், பாசத்தோடும் வழிநடத்திய அன்புத்தெய்வமே! அம்மா, மாதம் ஒன்றானாலும் உங்கள் நினைவுகள் எங்கள் உயிருள்ள வரை மாறாது. எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத் துயில் கொண்ட எமது தாயாரின் மறைவின் போது நேரில் கலந்து கொண்டோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் நாளை (19 - 03 - 97) புதன் கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், ஆவரங்கால் நடராஜ் இராமலிங்க வித்தியாலய அதிபர், ஆசிரியர், மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவன்,
பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்.

சி. இராமலிங்கம்,
சிவசக்தி கோயிலடி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(45785)


## 2 யாழ். தமிழர்கள் தமிழகத்தில் கைது!

கொழும்பு, மார்ச் 18

தமிழ் நாட்டில் இருந்து வெடிமருந்துகள், துப்பாக்கிகள் மற்றும் எலக்ரோனிக் பொருள்களை யாழ்ப்பாணத்துக்கு கடத்த முயன்றதாகக் கூறப்படும் இரு யாழ்ப்பாணத் தமிழர்கள் தமிழ் நாடு பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நபர்கள் கடத்த முயன்ற பொருள்களின் பெறுமதி இலங்கை நாணயத்தில் நாலரைக் கோடி ரூபா என்று இந்திய சுங்கப்பகுதியினர் தெரிவித்தனர். (உ-3)

## மாநகரசபைக்கு புதிய உழவு இயந்திரம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ். மாநகரசபையின் பொதுச் சுத்திகரிப்பு பணிகளில் ஈடுபடுத்துவதற்காக புதிய உழவு இயந்திரம் ஒன்றை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் வழங்கியுள்ளது. இந்த உழவு இயந்திரத்தை மாநகர சபை அதிகாரிகளிடம் கையளிக்கும் வைபவம் நல்லூரில் உள்ள அகதிகளுக்கான ஐ. நா. தூதரக இல்லத்தில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் சார்பில் கறாி, பாலகிருஸ்ணன் ஆகியோரும்—

மாநகர சபை சார்பில் பதில் ஆணையாளரும் மின் பொறியியலாளருமான திரு. நவரத்தினராசா, பொது சுகாதாரப் பிரிவு பொறியியலாளர் திரு. இரவீந்திரகுமாரன், வாகனப் பிரிவு அத்தியட்சகர் மு. தேவராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)

## சைக்கிள் உரிமத் தகடுகள்

புலோலி, குடத்தனை, [illegible] கங்களினால் இவ்வாண்டுக்கான சைக்கிள் உரிமத் தகடுகள் தற்போது விநியோகிக் கப்பட்டு வருகின்றன.

## தமிழருக்கு எதிரான மனித உரிமை மீறல்கள்

### பிரிட்டிஷ் கவுன்ஸில் கவலை

கொழும்பு, மார்ச் 18

தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக கவலை தெரிவித்து பிரிட்டிஷ் அகதிகள் கவுன்ஸில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் தொடர்வதை அரசு தடுக்க முடியாத நிலையில் உள்ளதா அல்லது தடுக்க விருப்பம் இல்லாத நிலையில் உள்ளதா? என்று தெரியாமல் உள்ளது.

தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களை தடுக்க உருப்படியான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று பிரிட்டிஷ் அகதிகள் கவுன்ஸில் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (ஐ-3-150)

## பகிரங்க விவாதத்துக்கு வருமாறு கணேசலிங்கத்துக்கு அழைப்பு!

### ஐ.தே.க. சார்பு வேட்பாளர் கடிதம்

கொழும்பு, மார்ச் 18

தமிழர்களின் பிரச்சினையை முன்வைத்து பகிரங்க தொலைக்காட்சியில் விவாதம் ஒன்றை நடத்த வருமாறு ஐ. தே. கவின் சார்பில் கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடும் மகேந்திரன், பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவுடன் சுயேச்சைக் குழுவாகப்போட்டியிடும் கே. கணேசலிங்கத்துக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக திரு. மகேந்திரன் கணேசலிங்கத்துக்கு கடந்த 12 ஆம் திகதி கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் தேர்தல் நடந்த காலப் பகுதியில் யாழ். நூலகம் எரிக்கப்பட்ட சமயம் ஐ. தே. கவின் பக்கம் இருந்து அக் கட்சிக்கு ஆதரவு வழங்கிய தாங்கள் ஏன் அப்போது அக் கட்சியை விட்டு வெளியேறவில்லை. இன்று மட்டும் ஐ.தே.கவுக்கு எதிராகக் குரல் எழுப்பி அக் கட்சியில் இருந்து வெளியேறியுள்ளீர்கள்? — என்று அக் கடிதத்தில் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ஐ-3-150)

## விளையாட்டுப் போட்டி

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை புதன்கிழமை அதிபர் எஸ். பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும். (ஐ-111)

## ஒரே நாளில் பிறப்புச் சான்றிதழ் பெற்றுத்தருவதாகக் கூறி மோசடி

நவாலி, மார்ச் 18

யாழ். பிறப்பு இறப்பு காரியாலயத்திற்கு பிறப்பு சான்றிதழ் பெற வருபவர்கள் யாழ். செயலகத்திற்கு வெளியே ஒரு சில நபர்களால் வழங்கப்படும் போலிச் சான்றிதழ்களைப் பெற்று ஏமாற வேண்டாமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தமது அவசர தேவைகளுக்காக பல மைல்களுக்கப்பாலிருந்து பதிவாளர் அலுவலகத்திற்கு வரும் மக்களிடம் ஒரே நாளில் பிறப்புச் சான்றிதழ் பெற்றுத் தருவதாகக் கூறி ஒரு தொகைப் பணத்தைப் பெற்றுக் கொண்டு சில மணி நேரத்தின் பின்னர் போலிச் சான்றிதழை சிலர் வழங்கி வருவது தெரியவந்துள்ளது.

இவ்வாறு வழங்கப்பட்ட சான்றிதழ்களில் மூன்று கடந்த வாரம் யாழ். பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலக அதிகாரிகளிடம் சிக்கிக் கொண்டன.

தமது பிறப்பு சான்றிதழ்களைப்பெற விரும்புகின்றவர்கள் நேரடியாக பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று அவர்களால் வழங்கப்படும் படிவங்களைப் பூர்த்தி செய்து சமர்ப்பித்தால் ஓரிரு வாரங்களில் பிறப்புச் சான்றிதழ் அவர்களின் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.

பதிவு இல்லாதவர்கள் பதிவாளர் அலுவலக அதிகாரிகளிடம் அல்லது அங்குள்ள உத்தியோகத்தர்களிடம் தொடர்பு கொண்டால் அதற்கேற்ற ஒழுங்குகளை அவர்கள் செய்து கொடுப்பார்களென்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-100)

## வடமராட்சி பிரதேச அபிவிருத்திக்கு நிதிஒதுக்கீடு இம்முறை குறைப்பு

பருத்தித்துறை, மார்ச் 18

வடமராட்சிப் பிரதேச அபிவிருத்திக்கான பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீடு இம்முறை குறைக்கப்பட்டுள்ளது.

மாகாண சபையினால் பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி பிரதேச செயலகங்களுக்கு கடந்த ஆண்டு தலா 12இலட்சம் ரூபா வீதம் நிதி ஒதுகீடு செய்யப்பட்டு வந்தது. இவ்வருடம் தலா 10 இலட்சம் ரூபாவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதனால் அபிவிருத்திப் பணிகளை 10 சதவீதத்தினால் குறைக்கவேண்டி ஏற்பட்டுள்ளதாக இப்பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ-118)


### உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் (வ/து)

### எழுதுவினைஞரும், தட்டச்சாளரும் (பயிற்சியாளர்) - CLERK CUM TYPIST

மேற்படி பயிற்சியாளரைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விவரங்களைச் சங்கக் கிளைகளிலும், தலைமைக் காரியாலயத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி:- 24 - 03 - 97 ஆகும்.

பொது முகாமையாளர்.
உடுப்பிட்டிப. நோ. கூ. சங்கம்,
உடுப்பிட்டி.

(சி/321)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புலிகளின் பலம் பற்றிய மதிப்பீட்டில் தளபதிகள் மத்தியில் முரண்பாடு!

## அவர்களைத் தோற்கடிக்க திட்டம் வகுப்பதில் தெளிவற்ற நிலை

''யார் யாரை ஏமாற்று கிறார்கள்'' (Who is Fooling Whom?) என்ற தலைப்பில் சண்டே ரைம்ஸின் கடந்த 9 ஆம் திகதிய பதிப்பில் வெளியான ஆசிரிய தலையங்கத்தின் சில பகுதிகள் இங்கே பிரசுரமாகின்றன.

''புலிகள் பலவீனப்படுத்தப்பட்டுள்ளார்கள் என்பதைத் தெளிவாகக் கூறமுடியும்'' என்று இராணுவத் தளபதி ரொஹான் தலுவத்த கடந்த வாரம் அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்திருந்தார்.

விமானப்படைத் தளபதி ஒலிவர் ரணசிங்கா அளித்த பேட்டி ஒன்றில், ''புலிகளின் பலம் பெரிதாக இல்லை என்று கூறுபவர்களுக்குப் போதுமான அறிவு இல்லை என்றே கூறவேண்டும். எதிரிக்கு போதுமான பலம் இல்லை என்றால் எப்படி 3000—4000 புலிகள் ஆனையிறவுக்கு முன்பாக திரண்டு வந்து தாக்க முடியும் அவர்களிடம் ஆட்லறியும் உள்ளனவே' என்று கேட்டிருந்தார்.

இரு தளபதிகளும் எதிரியின் பலம் பற்றிய முரண்பாடான தகவல்களை தங்களின் பேட்டிகளில் வெளியிட்டிருக்கின்றனர். இப்படி இரு தளபதிகளும் எதிரியின் பலம் பற்றி தனித் தனியாக முரண்பாடான மதிப்பீடு செய்வது குழப்பத்தைத் தான் ஏற்படுத்தும். எதிரியின் பலம் பற்றிய முரண்பாடான மதிப்பீடு எப்படி வெளியாகியது?

''ரிவிரஸ'' நடவடிக்கைக்குப் பின்பு ரொஹான் தலுவத்த — புலிகள் பலவீனப்படுத்தப்பட்டு விட்டார்கள் இனி திரண்டு வந்து தாக்குதல் நடத்த அவர்களால் முடியாது —என்றார். அதன் பின்னர் புலிகள் முல்லைத்தீவு இராணுவ முகாம் மீது பாரிய தாக்குதல் ஒன்றை மேற் கொண்டனர். இராணுவத்துக்கு பேரழிவு ஏற்பட்டது. அதன் பின்னர் பரந்தன் தாக்குதலை புலிகள் நடத்தினர்.

'எடிபல' நடவடிக்கையின் பின்னர் புலிகள் பலவீனமடைந்து விட்டனர் என்பதை தெளிவாகக் கூற முடியும் என்றார் ரொஹான் தலுவத்த. இப்போது சீனன் வாடி விமானத்தளம் வவுணதீவு முகாம் — மட்டக்களப்பு 3 ஆம் படையணி தலைமையகம் மீது புலிகள் தாக்கியழிவைத் தந்துள்ளனர். இத் தாக்குதல்கள் குறிப்பிட்ட காலத்தினுள் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரலாம் என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

யாரையார் முட்டாள்களாக்குகின்றனர்? தங்களைத் தாங்களே முட்டாள்களாக்குகின்றனரா? அல்லது மக்களின் மனோதைரியத்தை ஊக்குவிக்கத் தளபதிகள் இப்படிக் கூறுகின்றனரா? அப்படி என்றால் இந்த மதிப்பீடு ஒரு தவறான கணிப்பாகும்.

நவீன ஆயுதங்கள், நிதி, போர்த்தள பாடங்கள் ஆகியன தான் அரசின் பலமாக உள்ளது. சமூக, அரசியல், பொருளாதாரத்துறைகளில் ஒருங்கிணைப்பின்மை மற்றும் படைச் செலவீனம் ஆகியன அரசின் பலவீனமாக உள்ளது. பிரதேசங்களைத் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது. ஆயுதங்கள் மற்றும் போர்க்கருவிகளை இடத்துக்கு இடம் எடுத்துக் கொண்டு செல்லக்கூடிய நடமாட்டச் சுதந்திரம், மக்களுடனான நல்லுறவு ஆகியன கெரிலாக்களின் பலமாக உள்ளன. கெரிலாக்களின் பலவீனமாக மனித வளம் இன்மை. அயுதமின்மை ஆகியன அமைகின்றது. இதனால் கெரிலாக்கள் அரசுக்கு இராணுவ ரீதியாக பாரிய இழப்புக்களை ஏற்படுத்துவதில் ஈடுபட்டுள்ளனர். இதன் மூலம் அரசுக்கு ஒரு அரசியல் நெருக்கடியை கெரிலாக்கள் ஏற்படுத்துகின்றனர்.

இராணுவ ரீதியில் கெரிலாவின் இலக்காக - இராணுவத்தை அதன் அளவுக்கு அதிகமான பிரதேசங்களில் நிலை கொள்ளச் செய்வதும் அரசியல் ரீதியில் அரசைச் செல்வாக்கிழக்கச் செய்வதும் பொருளாதார ரீதியில் யுத்தத்திற்கான செலவீனத்தை அரசினால் தாங்கமுடியாத அளவுக்கு அதிகரிக்கச் செய்வதுமாக அமைகின்றன. இவற்றைச் செய்யக்கூடிய திறமை விடுதலைப்புலிகளுக்கு இருக்கும் வரை, விடுதலைப்புலிகளைப் பலவீனப்படுத்தப் பட்ட சக்தியாக கருதமுடியாது அப்படி எண்ணுவது எதிரியின் திறமையைக் குறைத்து மதிப்பிடுவதாக முடியும். இந்தஎண்ணம் — எதிரியை அரசியல், இராணுவரீதியில் தோற்கடிப்பதற்குத் திட்டம் வகுப்பதில் தெளிவற்ற ஒரு நிலையையும் ஏற்படுத்தும்.

இரண்டு தளபதிகள் - ரொஹான் தலுவத்த ஒலிவர் ரணசிங்க — ஆகியோரின் — எதிரியின் பலம் பற்றிய முரண்பாடான கூற்றுக்கள், எதிரியை மதிப்பீடு செய்வதில் ஒரு குழப்ப நிலை இருப்பதையை காட்டுகிறது.

எதிரியின் பலம் மற்றிய இறுதி மதிப்பீடு - பல பிரிவுகளிலிருந்து, கிடைக்கப் பெறும் தகவல்களை அடிப்படையாக வைத்து — ஒரே ஒரு அமைப்பினால் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற மறுக்க முடியாத உண்மையை எடுத்துக் காட்டுகிறது.

நாட்டின் அரசுத் தலைமைப்பீடத்தில் எதிரியின் பலம் பற்றிய மதிப்பீட்டை ஒன்றுக்கு மேலான பிரிவுகள் மேற்கொள்வது குழப்பத்தையே உருவாக்குகிறது.


## விசேட கணிதம்

கணிதத்தில் 'D' பெறுபேறடைய O/L மாணவர்களுக்கு அரிய சந்தர்ப்பம்!

ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.

ஆசிரியர்: S. P. விநோத்

ஆரம்பம்: 18 - 03 - 1997 பி. ப. 3 மணி

சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்.

NEW ASTAN

5ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(45322)



உ

சுழிபுரம்

## ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்தப் பொங்கல் விழா

விளக்கு வைத்தல்: 18-03-1997 செவ்வாய்க்கிழமை
முதலாம் பொங்கல்: 25-03-1997 செவ்வாய்க்கிழமை
இரண்டாம் பொங்கல்: 01-04-1997 செவ்வாய்க்கிழமை

வழமை போல் நடைபெறும். அடியார்கள் ஊரடங்கு நேரத்தை தவிர்த்து பொங்கல் நிகழ்ச்சிகளில் பங்குபற்றி அம்பாளின் இஷ்ட சித்திகளை பெற்றுய்யும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தேவஸ்தான பரிபாலனசபை

சுழிபுரம். (45741)



## புது வருடத்தை முன்னிட்டு

# மகாநதி யின்

மாபெரும் சிறப்புத்தள்ளுபடி விற்பனை

10% முதல் 20% வரையிலான சிறப்புக்கழிவு

இத்தள்ளுபடி 18-3-97 தொடக்கம் 18-4-97 வரை

இன்றைய தலைமுறையினர்க்கேற்ப இறக்குமதி செய்யப்பட்ட

★ திருமணப்பட்டுச் சேலைகள், பட்டுவேட்டிகள்

★ ஆடவர்களுக்கேற்ற அழகான டிசைன்களில் T சேட், சேட், றெடிமேட் றவுசர், சூட்டிங் வகைகள்

★ மங்கையர்களுக்கேற்ப அழகான டிசைன்களில் ஸ்கேட் அன் பிளவுஸ், கவுண், புதிய சாறிவகைகள் (இந்தியன், முத்து, காதல்கோட்டை, ஔவைசண்முகி, தேவராகம், அருணாச்சலம்) மேலும் புதிய சாறி வகைகள்

★ சிறுவர், சிறுமியர்களுக்கேற்ப கண்கவர் சிங்கார ஆடைவகைகள்

மற்றும்

சகலவிதமான ரவிக்கைதுணிவகைகளும், பட்டசில்க், யோயோ, இன்ரகூலர் பிறின்ட், பிளேன், வாபிறா போன்ற துணி வகைகளுக்கும்

# மகாநதி புடைவை அகம்

சாவகச்சேரி. (45837)


## கண்ணீரவிழிகளுடன் ஈராண்டு நினைவலைகள்



மலர்வு: 22 — 05 — 1937

உதிர்வு: 10 — 04 — 1995

### அமரர் ஆறுமுகம் ஜெயரத்தினம்

(முன்னாள் இலங்கை வங்கி உதவி முகாமையாளர்)

திதி: 18 - 03 - 97

கையெடுத்த தெய்வம் எல்லாம் உன்னைக்
கைவிட்டதோ என்று கண்டவரும் கேட்கும்படி
கண் காணாமல் காலன் உமை கவர்ந்து சென்றானே
கவனமாய் போய் வா என்றது தான்
கடைச் சொல் என்றறியாமல் நாமும் போனோமே
ஆண்டுகள் இரண்டு சென்றும் ஆறலையே எம்துயரம்
இன்னும் எத்தனை ஆண்டு இத்துயரதில் நான் வாழ?

தங்கள் ஆத்மா இறைவனடியில் அமைதி பெற்றிட
இறைஞ்சும் உங்கள் குடும்பத்தினர்.

66/2, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். (45819)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே. கட்சியுடன் சேர்ந்துகொண்டு

# தொண்டா அரசைக் கவிழ்ப்பாரா?

## கொழும்பு அரசியல் வட்டாரங்களில் கேள்வி

கொழும்பு, மார்ச் 18

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் சில நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தம் பக்கம் அழைத்துக் கொண்டு ஐ.தே. கட்சியுடன் இணைந்து அமைச்சர் தொண்டமான் அரசை வீழ்த்தப் போகிறார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக அமைச்சர் தொண்டமானுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, இச் செய்திகளை அவர் மறுத்து விட்டார் என்று ''வீக்கெண்ட் எக்ஸ்பிரஸ்'' தெரிவித்துள்ளது.

இப்படியான எண்ணம் எதுவும் எனக்கு இல்லை. ஜனநாயக முறையில் தெரிவான அரசாங்கம் அதன் பதவிக்காலம் வரை ஆட்சியில் இருக்க வேண்டும். அரசாங்கத்தை வீழ்த்த நான் ஒருபோதும் முயல மாட்டேன் என்று அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்குறித்து அவரிடம் கேட்டபோது — 'பேச்சுக்கள் குறித்து அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் அக்கறை இல்லை. அவர்கள் விரும்பினால் நான் இருதரப்புக்கும் இடையில் பேச்சுக்கள் ஆரம்பிக்க உதவுவேன்' — என்றுதெரிவித்தார் என அப்பத்திரிகை மேலும் குறிப்பிட்டுள்ளது.

(ஐ-3-150)

# ஜேர்மன் நிறுவனத்தின் உதவியுடன் பாடசாலைகளில் திருத்தவேலைகள்

வடமராட்சி, மார்ச் 18

கடந்த கால இராணுவ அனர்த்தங்களால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட பாடசாலைகளை புனரமைக்க ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று உதவிகளை வழங்கவுள்ளது.

யாழ். கல்வி வலயம் இரண்டில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை,கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, ஆகிய மூன்று பாடசாலைகள் இதற்கென தெரிவு செய்யப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட ஜேர்மன் நிறுவன பிரதிநிதிகள் இப்பாடசாலைகளுக்கு அண்மையில் நேரில் விஜயம் செய்து பார்வையிட்டதுடன் இப்பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கம், பழையமாணவர்சங்கம் ஆகியவற்றுடன் கலந்துரையாடினர்.

இப்பாடசாலைகளைத் திருத்தத் தேவையான நிதியில் 75 வீதத்தை ஜேர்மன் நிறுவனம் வழங்கும், மிகுதி 25 வீதமான நிதியை. சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்கள் வழங்குவதுடன் புனரமைப்பு பணிகளிலும் இச்சங்கங்கள் பங்கெடுத்துக் கொள்ளும்.

ஜேர்மன் நிறுவனத்தின் இவ்வுதவித்திட்டத்துக்கு அடுத்த கட்டமாக வடமராட்சிப் பிரதேசத்தில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், உடுப்பிட்டி அ.மி. கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆகியன சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

(ஐ-173-118)

## சேவை நீடிப்பு வழங்குவதில்லை என முடிவு

கொழும்பு, மார்ச் 18

அடுத்து மூன்று மாத காலத்தினுள் பதவியில் இருந்து ஓய்வு பெறவுள்ள பொலீஸ் மா அதிபர் ஆர்.பி. ராஜகுரு மற்றும் பல பிரதிப் பொலீஸ் மா அதிபர்களின் சேவைக் காலத்தை நீடிப்பதில்லை என அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கின்றது.

(ஐ-10)

# சனசமூக நிலைய சமாசங்களும் சம்மேளனமும் புனரமைக்கப்படும்

## உள்ளூராட்சி உதவி ஆணையாளர் நடவடிக்கை

திருநெல்வேலி, மார்ச் 18

யாழ். மாவட்டத்தில் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக சனசமூக நிலையங்களின் சமாசத்தையும், அதனைத் தொடர்ந்து யாழ். மாவட்ட ரீதியான சனசமூக நிலையங்களின் சமாசங்களின் சம்மேளனத்தையும் விரைவில் புனரமைப்புச் செய்வதற்கு யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ரி. வி. கிருஷ்ணசாமி நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இதற்கு முன்னோடியாக பிரதேச செயலர் பணிமனைகளில் கடமையாற்றி வரும் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடமிருந்து தற்போது இயங்கி வரும் சனசமூக நிலையங்களின் விவரம், பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களின் விவரம், யுத்தகால அனர்த்தங்களினால் இயங்காதிருந்த சனசமூக நிலையங்களை மீண்டும் இயங்கச் செய்வதற்கு மேற்கொண்ட நடவடிக்கை தொடர்பான விவரம் ஆகியன யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனையினால் கோரப்பட்டுள்ளன.

இதே வேளை இதுவரை காலமும் பிரதேச செயலர் பணிமனைகளில் கடமையாற்றி வந்த சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அனைவரும் யாழ். பிராந்தியஉள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனையுடன் இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இருவருட காலமாக யாழ். மாவட்டத்தில் செயற்படாமல் இருந்த யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனை தற்போது மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

இதனையடுத்து யாழ். பிராந்தியத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான புள்ளி விவரங்களை திரட்டுவதற்கும், அவற்றின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பிராந்தியத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் பலவற்றில் எழுது வினைஞர்கள், கணக்கு பதிவாளர்கள், தட்டெழுத்தாளர்கள், நூலகர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் ஆகியோருக்கு பற்றாக்குறை நிலவுகின்றது. ஆளணி பற்றாக்குறையினால் சிலஉள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு விரைவான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தமது திணைக்கள தலைமை பீடத்திடம் கோரிக்கை விடுத்திருப்பதாக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ரி. வி. கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

(ஐ-135)

# தென்மராட்சி பாடசாலைகளில் முறைசாராப் பயிற்சி நெறிகள்

தென்மராட்சிப் பகுதியில் பாடசாலையைவிட்டு விலகிய மாணவர்களுக்கான முறைசாராக் கல்விப் பயிற்சி நெறிகள் பாடசாலைகளில் ஆரம்பிக்கப்படவுள்ளன. இப் பயிற்சிநெறிகளில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் பயிற்சி நெறிகள் கற்பிக்கப்படும் பாடசாலை அதிபர்களுக்கு விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

உடை அமைத்தல் பயிற்சி நெறிகள் சாவகச்சேரி டிறீபேர்க் கல்லூரி, கைதடி முத்துக் குமாரசுவாமி ம.வி. கொடிகாமம் அ.த.க. பாடசாலை, மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை ஆகியவற்றிலும், —

தமிழ், தட்டச்சு, சுருக்கெழுத்து பயிற்சி நெறிகள் சாவகச்சேரி மகளிர்கல்லூரி, கொடிகாமம் திருநாவக்கரசு மகாவித்தியாலயம் ஆகியவற்றிலும், —

ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து பயிற்சி நெறிகள் சாவகச்சேரி டிறீபேர்க் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் ஆகியவற்றிலும் —

வர்த்தக சித்திரம் பாடநெறி சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும் —

வர்த்தக நிறுவக கணக்குப் பதிவுகள் பாடநெறி சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் —

மரத் தளபாட பயிற்சிநெறி மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம், கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம் ஆகியவற்றிலும் பயிற்றுவிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-117)


பச்சிலைப்பள்ளி
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வ - து)
பளை

## விசேட பொதுக்கூட்டம்

காலம்: **02-04-1997 ஆம் திகதி புதன்கிழமை**
காலை **10-00** மணி

இடம்: சங்க கூட்டுறவு மண்டபம்

தலைமை: திரு. சி. சுந்தரலிங்கம் அவர்கள்
(சங்கத் தலைவர்)

### முதன்மை விருந்தினர்

திரு. செ. கு. சண்முகநாதன் அவர்கள்
(கூ. ஆ. உ. ஆணையாளர், யாழ்ப்பாணம்)

திருமதி கோ. திருநாவுக்கரசு அவர்கள்
(கூ. ஆ. உ. ஆணையாளர், இணக்காய்வு - யாழ்ப்பாணம்)

### நிகழ்ச்சி நிரல்

1) மௌனப் பிரார்த்தனை
2) நிகழ்ச்சி நிரல் வாசித்தல்
3) தலைமை உரை
4) முதன்மை விருந்தினர் உரை
5) சென்ற விசேட பொதுக் கூட்ட அறிக்கை வாசித்தல்
6) 1997/1998 ஆம் ஆண்டிற்கான சங்க மொத்தக் கடன் எல்லையைத் தீர்மானித்தல்
7) 1997/1998 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை அங்கீகரித்தல்
8) சங்க இழப்பீடுகளை தெரிவித்தலும், அங்கீகரித்தலும்
9) பொதுச் சபையின் அங்கீகாரம் பெற வேண்டிய செலவுகளை அங்கீகரித்தல்
(அ) லொறித் திருத்தங்கள்
10) மினிபஸ் கொள்வனவிற்கான அங்கீகாரம் பெறல்
11) தேங்காய் எண்ணெய் ஆலை ஆரம்பிப்பது பற்றி ஆராய்தல்
12) மக்கள் கடைக்கான அங்கீகாரம் பெறல்
13) புதிய இயக்குநர் சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்தல்
14) நன்றி உரை

முக்கிய குறிப்பு:

பொதுச்சபை பிரதிநிதிகளுக்கு நிகழ்ச்சி நிரலும், இணைப்புக்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. நிகழ்ச்சி நிரலும், இணைப்புக்களும் கிடைக்கப் பெறாதவர்கள் சங்கச் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

பொதுச்சபைப் பிரதிநிதிகள் அனைவரையும் தவறாது கூட்டத்தில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சி. சுந்தரலிங்கம், தலைவர்.
ச. யோகராசா, செயலாளர்.

பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம்,
பளை.
(சி-324)


## 90 ஆம் நாள் நெஞ்சுருக்கும் நினைவலைகள்



தங்க மகளாக
15 — 10 — 1943

தங்காத தாயாக
17 — 12 — 1996

திருமதி
### சரஸ்வதி இராசேஸ்வரன்

மங்கலம் என்பது மனை என்றாய்
தங்கம்உன் குணமென்று சொல்லவே நின்றாய்
எங்ஙனம் தாங்குவோம் ஏங்கவே சென்றாய்
எங்களின் உணர்வினை ஏனம்மா கொன்றாய்.

வதைபட்ட நாள்களோ தொண்ணூறு ஆக
வாஞ்சையால் உன்னையே நினைமனம் வேக
பதையுங்கள் என்றேனோ எண்ணினாய் போக
படிகின்ற கண்ணீரே அஞ்சலி ஏற்பாய்.

19-03-1997 காலை 7 மணிக்கு நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கப் பணிகிறோம்.

ந. இராசேஸ்வரன், குடும்பத்தினர்.

பெரியதோட்டம்,
கரவெட்டி கிழக்கு,
(சி/326)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமார் ஒரு லட்சம் பேர் இன்னும் விசேட அ.அட்டை பெறவில்லை!

## உடன் விண்ணப்பிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 18

'குடாநாட்டில் இன்னமும் ஒருலட்சம் பேருக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டி உள்ளது. ஆனால் பொதுமக்களிடமிருந்து போதியளவு விண்ணப்பங்கள் எமக்கு கிடைக்கவில்லை'

இவ்வாறு யாழ். செயலக ஆட்பதிவுத்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குடாநாட்டில் உள்ள சுமார் 4 லட்சத்து 17 ஆயிரம் பொதுமக்களில் 2 லட்சத்து 80 ஆயிரம் பேருக்கு விசேட அடையாள அட்டை வழங்குவது என்ற இலக்குடன் எமது செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதுவரை ஒரு லட்சத்து 80 ஆயிரம் பேருக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு விட்டன.

பாடசாலை மாணவர்களுக்குரிய 7 ஆயிரத்து 617 அடையாள அட்டைகளும்—

பொதுமக்களுக்குரிய 3 ஆயிரத்து முந்நூறு அடையாள அட்டைகளும் — தற்போது தயார் நிலையில் உள்ளன.

ஆனால் சம்பந்தப்பட்டோர் இன்னமும் தமது அடையாள அட்டைகளைப் பெறவில்லை.

தினமும் 2 ஆயிரத்து 500 அடையாள அட்டைகளை கையாளக் கூடிய ஆளணி வசதியிருந்த போதிலும், போதியளவு விண்ணப்பங்கள் பொது மக்களிடம் இருந்து கிடைக்கவில்லை.

எம்மிடம் போதியளவு விண்ணப்பப்படிவங்கள் கையிருப்பில் உள்ளன.

இதுவரை அடையாள அட்டை பெற விண்ணப்பிக்காதவர்கள் உடன் தமது கிராம சேவையாளர்களுடன் தொடர்பு கொண்டு அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க வேண்டும் — என்று அவர் தெரிவித்தார்.

(ஐ—3)

★ தவறவிட்டவர்கள்

## மீண்டும் விண்ணப்பித்து விசேட அ. அட்டை பெறலாம்

யாழ்ப்பாணம், மார்ச். 18

குடாநாட்டில் விநியோகிக்கப்படும் விசேட அடையாள அட்டையைத் தவறவிட்டவர்கள் பொலீஸ் அறிக்கையுடன் மீண்டும் விண்ணப்பித்துப் புதிய அடையாள அட்டையைப் பெறமுடியும்.

யாழ். செயலக ஆட்பதிவுத் திணைக்கள அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

விசேட அடையாள அட்டையைத் தவற விடுபவர்கள் தமது அடையாள அட்டை இலக்கத்துடன் பத்திரிகையில் விளம்பரம் செய்ய வேண்டும்.

அதன் பின்பும் அ. அட்டை கிடைக்காது விட்டால், பொலீஸ் முறைப்பாடு செய்து அந்த முறைப்பாட்டுப் பிரதியுடன் கிராம சேவையாளரிடம் விண்ணப்பம் பெற்று அவரின் சிபார்சுடன் புதிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்துப் பெற முடியும் என்று அவர் கூறினார்.

(ஐ—3)

# விமானப்படைக்கு புதிய தளபதி நியமனம்

விரைவில் பதவியிலிருந்து ஓய்வு பெறவுள்ள விமானப் படைத் தளபதி எயர் வைஸ் மார்ஷல் ஒலிவர் ரணசிங்காவின் சேவைக் காலத்தை நீடிக்காமல் அதனால் உருவாகும் வெற்றிடத்திற்கு விமானப்படையின் பிரதம தலைமை அதிகாரியான எயர் வைஸ் மார்ஷல் கே. ஜி அனஸ்லம் பீரிஸ் நியமிக்கப்படவுள்ளார் என்று பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''ராவய'' சிங்கள வார இதழ் தெரிவித்துள்ளது.



தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவி புலமைப் பரிசிலை பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் அண்மையில் வழங்கியது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் நடந்த சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு விழா நிகழ்வில் பல்கலைக்கழக மாணவி செல்வி த நந்தினி அந்த புலமைப் பரிசிலை துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையிடமிருந்து பெற்றுக் கொண்ட போது எடுக்கப்பட்ட படம் இது.

# மக்கள் தந்த ஆணையிலிருந்து கடைசிவரை வழுவாது செயலாற்றியவர் தந்தை செல்வா

ஓர் இறைமை கொண்ட நாட்டின் அரசுக்கு உரிமை கோருவதற்கு தேசிய தனித்துவம் மட்டுமே போதுமானதல்ல. ஆள் புலம் இல்லாத ஓர் இனம் சிதறிப் பரவிய ஒரு மக்கள் தொகுதியாகவே இருக்கும். ஆகவே தமது தரிசனமான தமிழரசை இத்தீவில் நிதர்சனமாக்கும் பணியின் முதல் அடியாக தமிழ் மக்களின் மரபுவழித்தாயகக் கோட்பாட்டினைத் தந்தை செல்வா படிப்படியாகவே அறிவுறுத்தி வந்துள்ளார்.

பிராந்திய சபைகளுக்காக 1957 ஜூலைத்திங்களில் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவுடனும், மாவட்ட சபைகளுக்காக 1965 மார்ச் திங்களில் டட்லி சேனநாயக்காவுடனும் எழுத்து மூலமான ஒப்பந்த ஆவணங்களாலும், 1960 ஜூலைப் பொதுத் தேர்தலில் தமது கட்சி பதவியில் அமர்த்தப்பட்டால் பிராந்திய சபைகளுக்காக மறைந்த தமது கணவர் பண்டாரநாயக்கா கைச்சாத்திட்டிருந்த 'பண்டா —செல்வா' உடன்படிக்கையைத் தமது அரசு நடைமுறைப்படுத்தும் என்று வாய்மொழி உத்தரவாதமாகிய கனவான் ஒப்பந்தத்தால் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுடனும், தாம் செய்து கொண்டிருந்த உடன்படிக்கைகளால் தமிழ் மக்களின் மரபுவழித் தாயகத்தை மூவரும் ஏற்று அங்கீகரிக்கும்படி செய்வதில் தந்தை செல்வா வெற்றியடைந்திருந்தார் என்பது ஏற்கனவே தெரிந்ததொன்றாகும்.

இதன் பெறுபேறாக அங்கீகரிக்கப்பட்ட மரவு வழித் தாயகத்தைக் கொண்ட தமிழ் மக்களை ஒரு தேசிய இனம் எனும் அந்தஸ்த்துக்கும் உறுதியாக உயர்த்தியிருந்தார்.

மலேயா குடாநாட்டின் ஈப்போ நகரில் 1898 மார்ச் 31 ஆம் திகதி பிறந்த தந்தை செல்வாவுக்கு இம்மாதம் 31 ஆம் திகதி கொண்டாடப்படும் 99 ஆவது பிறந்த தினத்தை அடுத்து அன்னாரது ஜனன நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்கு நன்றியுள்ள தமிழீழ மக்கள் ஆயத்தமாகி வருவது தெரிந்ததே.

மலேயா, சிங்கப்பூர் நாடுகளுக்கு ஒரு நூற்றாண்டு காலம் அருபபணி புரிந்த இலங்கையர்களின் வாழ்க்கைக் குறிப்புக்களை சம்பந்தப்பட்ட பெரியார்களது படங்களுடன் தொகுத்து சிங்கப்பூர் வாசியாகிய துரைராஜாசிங்கம் ஆங்கிலத்தில் ஒரு நூலாக வெளியிட்டுள்ளார்.


மலேயா, சிங்கப்பூர் நாடுகள் ஈந்த அருங்கொடைகளாக வர்ணித்து தந்தை செல்வா மற்றும் அமரர் மு. திருச்செல்வம் ஆகிய இருவரது வாழ்க்கைக் குறிப்புக்களும் அவர்களது படங்களுடன் அந்த நூலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஆதலினால் தந்தை செல்வாவின் ஜனன நூற்றாண்டுவிழா அந் நாடுகளைச் சேர்ந்த தமிழர்களாலும் கொண்டாடப்படும் என எதிர்பார்க்கலாம்.

1947 பொதுத் தேர்தலில் சோல்பரி ஒற்றையாட்சி அரசமைப்புக்கு ஆதரவாக சட்டசபையில் வாக்களித்திருந்த தமிழ் பிரதிநிதிகளை அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி தோற்கடித்தது அதன் பின்னர் அக்கட்சி பிரித்தானிய குடியேற்ற நாடுகளின் செயலாளருக்கு அனுப்பியிருந்த தந்திச் செய்தியில் ''தமிழ்மக்கள் மேற்படி அரசமைப்பை நிராகரித்து விட்டார்கள். ஏற்புடைய ஒரு மாற்றுத் தீர்வு முன் வைக்கப்படாவிடத்து தமிழ் மக்கள் தமது சுயநிர்ணய உரிமையை வலியுறுத்துவர்'' எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

முதலாவது நாடாளுமன்றத்தின் முதலாவது சிம்மாசன உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்துக்கு, காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக ஒரு திருத்தத்தைப் பிரேரித்த தந்தை செல்வா, ''தமிழ்மக்கள் விரும்புவார்களாகில் பிரிந்து செல்லும் உரிமை ஏன் அவர்களுக்கு இருக்கக் கூடாது'' என வினா எழுப்பியிருந்தார்.

(நாடாளுமன்ற விவாதங்கள் — 1947 நவம்பர் 26 ஆம் திகதி)

வடக்கு - கிழக்கு மாகாணங்களைத் தமிழ்ப்பேசும் மக்களின் மரபுவழித் தாயகமாக ஏற்று அங்கீகரிக்கும்படி செய்து அவர்களை ஒரு தேசிய இன அந்தஸ்த்துக்கு உயர்த்தியிருந்ததன் பெறுபேறாகவே, 1972 ஒக்ரோபர் மூன்றாம் நாள் அரசுக்கு



சவால் விட்டு, தேசிய அரசுப் பேரவையில் இருந்து தந்தை செல்வாவினால் விலக முடிந்தது.

அவர் அப்போது கூறியதாவது.

''...சென்ற இருபத்திநான்கு ஆண்டுகளாக நடந்தவற்றை மனதில் கொண்டு, தமிழ் மக்கள் இந்த நாட்டில் ஓர் அடிமை இனமாக அழிவதா அல்லது சுதந்திர மக்களாக வாழ்வதா? என்ற தமது வருங்காலத்தை நிர்ணயிக்கும் உரிமை அவர்களுக்கு வேண்டும் என்பதே எனது கொள்கையாக இருக்கும். விடுதலை பெற்ற மக்களாக வாழவேண்டும் என்ற கொள்கைக்கு வாக்களிக்குமாறு (தமிழ்) மக்களை நான் கேட்கிறேன்.

''இந்தக் கொள்கையில் அரசாங்கம் என்னோடு போட்டியிடட்டும் நான் தோல்வி அடைத்தால் என் கொள்கையை நான் விட்டு விடுகிறேன். அரசாங்கம் தோல்வியடைந்தால் தமது கொள்கையையோ, அரசியல் திட்டத்தையோ தமிழ் மக்கள் ஆதரிப்பதாகக் கூறுவதை அரசு நிறுத்திவிட வேண்டும். இடைத் தேர்தலைப் பின்போட்டு இப்பிரச்சினைகளை ஒட்டி மக்கள் தீர்ப்பு வழங்குவதைத் தடுக்கவேண்டாமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன்'' — என்பதாகும்.

**சா. ஆ. தருமரத்தினம்**

ஒரு பொதுக் கருத்துக் கணிப்பாக எதிர்கொள்ளப்பட்ட இடைத் தேர்தலில் காங்கேசன்துறை வாக்காளர்கள் அளித்த ஆணையில் இருந்து தந்தை செல்வா பின்னொரு போதுமே வழுவியதில்லை; பின்வாங்கியதில்லை.

ஐயம் திரிபறத் தமிழ் மக்களால் எடுத்துக் கூறப்பட்ட அத் தீர்ப்புக்கு அமைவதாக உறுதியுரைத்த தந்தை செல்வா தேசிய அரசுப் பேரவைக்குச் சென்றார். தமிழ் மக்கள் விடுதலை பெற்ற இனமாக வாழ்வார்கள். ஆட்சியுரிமையைப் பெறுவதே அவர்களின் நோக்கம் எனக் கூறினார். அவர் தலைமையில், பன்னிரண்டு தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களும் சேர்ந்து கையெழுத்திட்டு முன்மொழிந்த பின்வரும் தீர்மானம் 1976, பெப்ரவரி 4 ஆம் நாளுக்குரிய தேசிய அரசுப் பேரவையின் நிகழ்ச்சிக் குறிப்பேட்டில் இடம் பெற்றது:-

**விடுதலை பெற்ற இறைமையுடைய மதச்சார்பற்ற சமதர்ம நாடான தமிழ் ஈழம்**

''இலங்கையின் இருவேறு நாட்டினங்களான சிங்களவரும் தமிழரும், சுயநிர்ணய உரிமையுடையவர்களாதலின் ''அந்நிய ஆட்சியால் பிணைக்கப்பட்ட சிங்கள நாட்டினமும் தமிழ் நாட்டினமும் இன்றுவரை பிணைக்கப்பட்டுள்ளமையால், சுதந்திர இலங்கையின் அரசுகள் அனைத்தும், சிங்கள நாட்டினத்தினை ஆக்கிரமிப்பு நாட்டினமாக ஊக்குவித்து வளர்த்த அதன் பயனாக இப்போதுள்ள அரசியலமைப்பு ஒருதலைப்பட்சமாகத் திணிக்கப்பட்டுத் தமிழ் நாட்டினம் ஆளப்படும் நாட்டினமாக்கப்பட்டுள்ளமையால்;

'காங்கேசன்துறை இடைத் தேர்தலில் மக்களால் வழங்கப்பட்ட தீர்ப்பை, விடுதலை பெற்ற இறைமையுடைய மதச்சார்பற்ற சமதர்ம நாடான தமிழீழத்தை அமைப்பதற்குரிய ஆற்றலுரிமையாக ஏற்றுக்கொள்வதென இப்பேரவை தீர்மானிக்கிறது.'

1976 மே 14 ஆம் நாள் வட்டுக்கோட்டையில் விடுக்கப்பட்ட பிரகடனம், தேசிய அரசுப் பேரவையில் காங்கேசன்துறை கருத்துக் கணிப்பை அடியொற்றி முன்மொழியப்பட்ட தீர்மானத்தின் ஒரு முறையேற்பேயன்றி வேறல்ல.

தந்தை செல்வாவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி 1972 அரசமைப்புத் திட்டத்துக்கும், பின்னர் ஜே. ஆர். ஜெயவர்த்தனா கொண்டு வந்த 1978 அரசமைப்புத் திட்டத்துக்கும் அவற்றுக்கான திருத்தங்களுக்கும் தமிழ் பிரதிநிதிகள் வாக்களியாது தவிர்த்துக் கொண்டனர். அதுபோலவே அவை மீதான விவாதங்களிலும் கலந்து கொண்டதில்லை. அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் கூட அதற்கு விதிவிலக்கல்ல!

★

(நன்றி:- மு. திருச்செல்வம் எழுதிய ''ஈழத் தமிழர் இறைமை'' பேராசிரியர் வில்சன் எழுதிய இலங்கைத் தமிழர் தேசிய நெருக்கடி, 1947 - 1977)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் பொது நூலகம்.

# உதயன்

## உத்தி மாறாதா?

முன்னாள் அமைச்சர் விஜேபால மெண்டிஸ், நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம், மின்சக்தி அமைச்சின் முன்னாள் செயலாளர் ஹக்கீம் மொஹமட் ஆகிய மூவரினதும் குடியுரிமைகள் பறிக்கப்பட வேண்டும் என்று விசேட ஜனாதிபதி ஆணைக்குழு சிபார்சு செய்திருக்கின்றது.

விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் சிபார்சை நடைமுறைப்படுத்துவதற்கு குடியுரிமையைப் பறிக்கும் சட்டம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு வாக்குகளால் நிறைவேற்றப்பட வேண்டும். ஆனால் அது சாத்தியமில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

ஆகையால் பெரும் பணச்செலவில் கண்டறிந்த குற்றத்துக்கு உரிய தண்டனையை வழங்க முடியாத இயலாத்தன்மை அரசுக்குத் தோன்றியுள்ளது.

ஆட்சியில் இருப்பவர்கள்- அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் — தமக்குள்ள அதிகாரங்களையும் செல்வாக்கையும் பயன்படுத்தி ஊழல், மோசடியில் ஈடுபடுவதே இன்றைய அரசியல் நடைமுறையாகி விட்டது.

"ஆட்சி அதிகாரத்தில் உள்ள அரசியல்வாதிகள் மட்டுமன்றி அவர்களின் விசுவாசத்துக்குரிய அதிகாரிகளும் (இரண்டாம் தரப்பினர்) கூட தமது பதவிக்குரிய அதிகாரங்களுக்கு அப்பாற்பட்டும், செல்வாக்கைப் பயன்படுத்தியும் மோசடி, ஊழல், உறவினர்களுக்கு உதவுதல் ஆகிய துஷ்பிரயோகங்களில் ஈடுபடுவதும் இயல்பாகி விட்டது. மூன்றாம் தரப்பினராக ஆட்சியில் உள்ள தலைவர்களின் கையாட்களும் இத்தகைய செயல்களில் ஈடுபடுகின்றனர்.

இவற்றைத் தடுத்து நிறுத்துவது என்பது மிகவும் கடினமான ஒன்றாகி விட்டது. நாட்டுக்கு நாடு அரசியல் உயர்மட்டங்களில் ஊழல்களும் மோசடிகளும் சர்வ சாதாரணம்.

பதவிக்கு வந்ததும் முந்திய அரசின் தலைவர்களின் நடத்தை குறித்து விசாரணை நடத்தவும் தண்டனை விதிக்கவும் அரசியல்வாதிகள் அவசரப்படுகின்றார்கள். ஆனால் தமது ஆட்சியில் அவற்றைத் தடுப்பதற்கு அக்கறை எடுப்பது மிக மிகக் குறைவு.

எமது நாட்டில் அரசியல்வாதிகள் தமது திட்டங்களையோ அல்லது தாம் செய்யும் நன்மைகளையோ முன்வைத்து மக்கள் ஆதரவைப் பெற முயற்சிப்பது மிகக் குறைவு.

எதிர்த்தரப்பு அரசியல்வாதிகளின் குறை குற்றங்களைப் புட்டுக்காட்டி அவர்களை மதிப்பிழக்கச் செய்து மக்கள் ஆதரவைப் பெறும் உத்தியையே பற்றிப் பிடிக்கிறார்கள். இதுவே புதிய அரசியல் நெறிமுறையாகிவிட்டது.

தங்களை முதலில் திருத்தித்தான் பிறரைத் திருத்த முயலவேண்டும். இதனை அரசியல் வாதிகள் எப்போது உணரப்போகிறார்கள்? அப்போதுதான்இலங்கையானது முன்னேறும். இல்லையேல் ஒரு தரப்பை மறுதரப்பு குற்றக் கூண்டில் ஏற்றி வஞ்சம் தீர்ப்பதிலேயே காலம் கழியும். அதனால் நாடு சீரழியும்.

# அக்காவின் ஆட்சியிலே வன்செயல்கள் அதிகம்

## தம்பி அனுரா கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 18

'எனது அப்பாவின், அம்மாவின் ஆட்சிக் காலங்களில் இல்லாத அளவுக்கு தேர்தல் வன்செயல்கள் பெருமளவில் எனது அக்காவின் ஆட்சிக் காலத்தில் நடக்கின்றன'

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தேர்தல் வன்செயல்கள் தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எனக்கு ஓர் ஆசை இருந்தது. தேசிய ரீதியில் இயக்கும் இரு கட்சிகளையும் அதாவது ஐ.தே.கவையும், சுதந்திரக் கட்சியையும் இணைத்து ஒரே கட்சியாக இயங்க வைக்க வேண்டும் என்று விரும்பினேன். ஒருவேளை சுதந்திரக் கட்சியிலிருந்து ஜனாதிபதி விலகிய பின்னர் அது நடக்கலாம்.

கடந்த இரண்டரை வருடம் செய்தவற்றை முன்வைத்து தேர்தலில் வாக்குக் கேட்காமல் நாலந்தா கொலையை வைத்து வாக்குக் கேட்பது கவலை தருகிறது.

ஐ.தே.கவில் உள்ள சகலரும் கொலைகாரரர் என்று கூறுவதும் கவலை அளிக்கும் விடயமாகும்.

இப்படி அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

[இ-3-150]

# சுவரொட்டிகளை அகற்றுமாறு பொலீஸ்மா அதிபருக்குப் பணிப்பு

கொழும்பு, மார்ச் 18

உள்ளூராட்சித் தேர்தலையொட்டி கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளையும், கட்அவுட்டுக்கள் மற்றும் பதாகைகளையும் அகற்றுமாறு தேர்தல் ஆணையாளர் பொலீஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இவற்றை அகற்றுமாறு அரசியல் கட்சிகளுக்கு உத்தரவிட்டதாகவும் —

ஆனால் அவை அகற்றப்படவில்லை என்றும் — தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

(இ-3-150)

# கண்டி நீதிபதியின் வீட்டுக்குக் கல் வீச்சு!

கொழும்பு, மார்ச் 18

கண்டி மாவட்ட நீதிபதியின் இல்லத்தின் மீது கடந்த வெள்ளி இரவு கல் வீச்சு இடம்பெற்றதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கண்டி மாவட்ட நீதிபதி ஒருபெண் ஆவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அந்தப் பெண் நீதிபதியின் கணவர் முறைப்பாடு செய்துள்ளார்.

ஹெரோய்ன் வர்த்தகர்கள் பலருக்குப் பெருந்தொகையான பணத்தை அபராதமாக இந்த நீதிபதி விதித்திருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ-3-150)

# ராணுவ வாகனச் சாரதியிடமிருந்து துப்பாக்கி கைப்பற்றப்பட்டது

கொழும்பு, மார்ச் 18

இராணுவ வாகன சாரதி ஒருவரிடம் இருந்து சட்டவிரோத துப்பாக்கி ஒன்றை பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் இணைப்புச் செயலாளர் டிங்கிரி பண்டா கொடுத்த தகவலைத் தொடர்ந்தே இவரைக் கண்டிப் பொலீஸார் கைது செய்தனர்.

குறிப்பிட்ட இராணுவ வாகன சாரதி தம்மைக் கொல்லச் சதித்திட்டம் தீட்டியிருந்ததாக தமக்கு அனாமதேயக் கடிதம் கிடைத்ததாகவும்—

அதன் பின்பே அவர் குறித்து தாம் பொலீஸாருக்கு தகவல் கொடுத்ததாகவும்— டிங்கிரி பண்டா தெரிவித்தார். (இ-3)

# தவக்காலச் சிந்தனை

**(35 ஆம் நாள் - செவ்வாய்)**

இஸ்ராயேல் மக்களின் விடுதலைப் பயண வாழ்வில் துன்பங்கள் தொடர்கையில் கடவுளையும், தம்மை வழிப்படுத்திவந்த தலைவன் மேயீசனையும் முறுமுறுத்து விரோத்மாகப் பேசினர். இதனாலே இறைவனால் 'கொள்ளிவால்' பாம்புகள் மூலம் தண்டிக்கப்பட்டனர். பின்னர்தான் அவர்கள் இறைவனுக்கு எதிராக எழுந்ததை உணர்ந்தார்கள். 'நாங்கள் கடவுளுக்கு எதிராகப் பேசினதால் பாவம் செய்தோம்.' (எண் 21:7)

நமது மனங்களும் தீமையை மையமாக வைத்து பகைமையை வளர்க்கவில்லையா! ஆனால் நன்மையை மையமாக வைத்தே, உறவை வளர்க்க சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முன்வரவேண்டும். சேதம் விளைவிக்கும் இறந்த காலத்தை விடுத்து, புதியன படைக்கும் எதிர் காலத்தை நோக்கவேண்டும். தன்னை உணர்ந்தவன் பிறரைச் சகித்துக் கொள்ளவும், இணைந்து வாழவும், செயற்படவும் முடியும். முன்வருவோமா? தவக்காலம் தன் மாகட்டும்!

— அ. பீற்றர் ராஜன்

# எவ். எக்ஸ். சி. காலமானார்

கொழும்பு, மார்ச் 18

முது பெரும் அறிஞர் எவ். எக்ஸ். சி. நடராஜா (86 வயது) கடந்த ஞாயிறு மட்டக்களப்பில் காலமானார்.

யாழ்ப்பாணம் காரைநகரைச் சேர்ந்த இவர் 1933 ஆம் ஆண்டு முதல் மட்டக்களப்பில் தனது பணியை மேற்கொண்டிருந்தார்.

(இ-3-150)

# நாளை

**பங்குனி 6**

**புதன்கிழமை**

திதி: ஏகாதசி
பின்இரவு 02-56 வரை.
நட்சத்திரம்: பூசம்
பின் இரவு 01.09 வரை.
ஏகாதசி விரதம்
சுபநேரம்: 04.49-06.19
ராகுகாலம்: 12.19-01.49
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# செய்திச் சாரம்

## சின்னமடு மாதா ஆலயத்தில் விரைவில் வழிபாடு

யாழ்ப்பாணம், மார்ச் 18

கத்தோலிக்கர்களின் யாத்திரைத் தலமான ஊர்காவற்றுறை சின்னமடு மாதா ஆலயத்தில் வழிபாடுகளை மீண்டும் ஆரம்பிக்க யாழ். ஆயர் இல்லம் நடவடிக்கை எடுத்துள்ளது. மற்றொரு யாத்திரைத் தலமான சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலயத்தில் வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ-173)

## உரும்பிராய்ப் பகுதி கிணற்று நீரில் கல்சியப் படிவுகள்

உரும்பிராய், மார்ச் 18

உரும்பிராய்ப் பகுதியில் உள்ள கிணறுகளில் நீரில் அதிகளவு கல்சியப்படிவுகள் காணப்படுவதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். சாதாரணமாகத் தினமும் கொதிக்க வைக்கும் நீரில் அதிகளவில் கல்சியப்படிவுகளை அவதானிக்க முடிகிறது. (ஐ-154)

## திருக்குறள் போட்டி

பருத்தித்துறை, மார்ச் 18

மூதறிஞர் க. சி. குலரத்தினம் நூற் பதிப்புக் கழகம் வடமராட்சிப் பாடசாலை மாணவரிடையே ஏற்பாடு செய்த திருக்குறள் போட்டி அண்மையில் புலோலி மெ. மி. த. க. பாடசாலையில் அதிபர் தலைமையில் நடைபெற்றன. பருத்தித்துறைக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. வே. தி. செல்வரட்ணம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். 20 பாடசாலைகளின் மாணவர்கள் போட்டியில் கலந்து கொண்டனர். (ஐ-118)

## முன்பள்ளிகளைப் பதிவு செய்க

பருத்தித்துறை, மார்ச் 18

யாழ். மாவட்டத்தில் சனசமூக நிலையங்களினால் நடத்தப்படும் முன்பள்ளிகளை அவ்வப் பகுதி பிரதேச செயலகங்களில் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்படும் முன்பள்ளிகளை மேற்பார்வை செய்து கற்றல், கற்பித்தல் உபகரணங்கள் மற்றும் தளபாட வசதிகள் வழங்கப்படவிருப்பதாக யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-118)

## புத்தூர் சோமஸ்கந்தா புனரமைப்பு

பருத்தித்துறை, மார்ச் 18

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி ரூபா 5 லட்சம் செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. இதற்கான நிதியை வழங்க அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் முன்வந்துள்ளது. இக் கல்லூரியில் இராணுவ நடவடிக்கைகளால் சேதமடைந்த பகுதிகளை கல்வித் திணைக்கள அதிகாரிகள் குழு அண்மையில் பார்வையிட்டது.

(ஐ-118)

## சம்மேளனக் கருத்தரங்கு

திருநெல்வேலி. மார்ச் 18

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தின் விசேட கருத்தரங்கு எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9-00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் சம்மேளனத் தலைவர் திரு. நா போஜன் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ரி.வி கிருஷ்ணசாமி கலந்து கொள்வார். (ஐ-135)

## கற்பித்தல் கண்காட்சி

திருநெல்வேலி, மார்ச் 18

சங்கானைக் கல்விக் கோட்டப் பிரிவில் ஆரம்பக் கல்வி கற்பித்தல் தொடர்பான கண்காட்சி நடைபெறுகிறது. நேற்று திங்கட்கிழமை அ. பிரிவு பாடசாலைகளில் கண்காட்சி நடைபெற்றது. இன்று செவ்வாய்க்கிழமை 'ஆ' பிரிவு பாடசாலைகளில் கண்காட்சி நடைபெறும்.

கோட்ட மட்டத்திலான கண்காட்சி எதிர்வரும் சனிக்கிழமை பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

(ஐ-135)

## மாவட்ட நீதிபதி நியமனம்

தென்மராட்சி. மார்ச் 18

சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் ஏ. என். இராமச்சந்திரன் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரின் இடத்திற்கு மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் எஸ். ரி. ஏகநாதன் மாவட்ட நீதிபதியாகவும் பதில் நீதிமன்ற நீதிவான் ஆகவும் நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ-117)

## அராலியில் பற்சிகிச்சை முகாம்

திருநெல்வேலி, மார்ச் 18

நடமாடும் பற்சிகிச்சை முகாம் ஒன்று நேற்று முதல் அராலி இந்துக்கல்லூரியில் நடைபெறுகிறது. எதிர்வரும் 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்த முகாமில் அராலி பொதுச்சுகாதாரப் பிரிவைச் சேர்ந்த ஆறுபாடசாலைகளில் இருந்து இனங்காணப்பட்ட மாணவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும். (ஐ-135)

## சிறப்புற நடந்த கண்காட்சி

திருநெல்வேலி, மார்ச் 18

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மகளிர் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட பொருள் காட்சியும், சர்வதேச மகளிர்தின விழாவும் கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் நடைபெற்றன. யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. எஸ்.கே. சண்முகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பொருள்காட்சியை ஆரம்பித்து வைத்தார். மாவட்ட மகளிர் குழுத் தலைவி திருமதி ரதி சோதிலிங்கம் தலைமையில் மகளிர்தின விழாநடைபெற்றது.

(ஐ-135)

## பஸ்வண்டியை தள்ளி இயக்கும் பயணிகள்

நெடுந்தீவு, மார்ச் 18

நெடுந்தீவில் உள்ளூர் சேவையில் ஈடுபட்டுள்ள பஸ்வண்டி அடிக்கடி வீதியில் நின்று விடுகிறது. அதன் பற்றரி நீண்டகாலமாக வலுவிழந்துள்ளதாலேயே பஸ் அடிக்கடி நின்று விட பயணிகள் இறங்கி அதனைத் தள்ளி இயங்கச் செய்கின்றனர். இவ்வாறு நாளாந்தம் நடப்பதால் பயணிகள் பெரும் சிரமங்களை அனுபவிக்கவேண்டி உள்ளது. (ஐ-111)

## மாவிட்டபுரத்துக்கு அதிகாரிகள் குழு

வடமராட்சி, மார்ச் 18

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலின் நிலையை நேரில் அவதானிப்பதற்காக அதிகாரிகள் குழு ஒன்று அண்மையில் அங்கு சென்று திரும்பியுள்ளது. (ஐ-173)

## தையல் பயிற்சி

குருநகர், மார்ச் 18

அல்வாய் சக்கோட்டை புனித பிரான்ஸிஸ்கு சவேரியார் ஆலயத்தில் அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் பெண்களுக்கான தையல் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

(ஐ-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவீகரிக்கப்பட்ட வாகனங்கள் அரச தரப்பு ஆதரவாளருக்கு

கொழும்பு, மார்ச் 18

உள்ளூராட்சித் தேர்தல் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் அவசரகாலச் சட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி பொலீஸார் தனியாருக்குச் சொந்தமான பல வாகனங்களைச் சுவீகரித்துள்ளனர் -இவ்வாறு சுவீகரிக்கப்பட்ட வாகனங்கள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பாவனைக்கு வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

இந்த வகையில் சுவீகரிக்கப்பட்ட பிக்கப் வாகனம் ஒன்று அரசாங்கத்தின் ஆதரவுடன் சுயேச்சைக் குழுவில் கொழும்பு மாநகர சபைக்குப் போட்டியிடும் கொழும்பு முன்னாள் மேயர் கே. கணேசலிங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வாகனத்தைப் பொலீஸ் மா அதிபர் தமது பொறுப்பில் கணேசலிங்கத்துக்கு வழங்கியுள்ளார் என்றும் —

இதனால் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பலவித கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன என்றும் — ''சண்டே லீடர்'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து பொலீஸ் மா அதிபர் மற்றும் கே. கணேசலிங்கத்துக்கு எதிராக லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான ஆணையாளரிடம் முறைப்பாடு செய்யப்படவுள்ளதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## துப்பாக்கிச்...

(முதலாம் பக்கத் தொடர்)

சேர்ந்த இராசதுரை பொன்ராசா (வயது 40) ஆகிய இருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

காலை 11 மணியளவில் அவ்வீதியில் இராணுவ டிராக்டர் ஒன்று வந்து கொண்டிருந்த சமயம் திடீரென அடுத்தடுத்து இரண்டு குண்டுச் சத்தங்கள் கேட்டதாகவும் அதனைத் தொடர்ந்து துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் தொடர்ச்சியாகக் கேட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். [இ-15]


யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி
சுன்னாகம்.

உயர்தர மாணவர் மன்ற
வருடாந்த ஒன்றுகூடல் வைபவம்

காலம்: 18-03-97 செவ்வாய் காலை 10.30 மணி

பிரதம விருந்தினர்கள்:
ஸ்கந்தா மைந்தன்
திருமிகு. M. தியாகராஜா B. A. (HONS)
L. L. B. Attorney - at - Law
திருமதி ரதி தியாகராஜா
(உதவி முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்.)

சிறப்பு விருந்தினர்:
ஸ்கந்தா மைந்தன்
திருமிகு. S. சிவராஜா
(முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி, சுன்னாகம்.)

(45866) அதிபர்.



விசேட அடையாள அட்டை
பற்றிய
அறிவித்தல்

கீழ் குறிப்பிடப்படும் அலுவலகங்கள்/ பாடசாலைகளுக்குரிய வி. அ. அ. 14,000 தயாராக உள்ளன. அவற்றை அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர்கள் மூலமாகப் பெற்று வழங்கும்படி வேண்டப்படுகின்றார்கள்.

1. பிரதேச செயலகப் பிரிவுகள்:
அ) சாவகச்சேரி ஆ) சண்டிலிப்பாய்
இ) நல்லூர் ஈ) மருதங்கேணி
உ) சங்கானை

2. பாடசாலைகள்:
உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பளை, பருத்தித்துறை, சாவகச்சேரி, கரவெட்டி ஆகிய கோட்டங்களைச் சேர்ந்த 50 பாடசாலைகள்.

கருத்திட்ட முகாமையாளர்
விசேட அடையாள அட்டைப் பிரிவு,
ஆள்களைப் பதிவுசெய்யும் திணைக்களம்,
செயலகம், யாழ்ப்பாணம்.
(சி/331)



கண்ணீர் அஞ்சலி

எமது சனசமூக நிலைய ஸ்தாபகர்
அமரர் சீனியப்பா செல்வரத்தினம்
(செல்வம் ஸ்ரோர்ஸ்)

அவர்களின் அகால மரணத்தை இட்டு ஆறாத் துயருறும் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை நிலையத்தின் சார்பில் தெரிவிக்கின்றோம்.

ஸ்ரீ துர்க்கா சனசமூக நிலையம்,
புன்னாலைக் கட்டுவன் வடக்கு.
[45864]


## கப்பல் பயணிகளுக்கு

காங்கேசன் துறையில் இருந்து திருகோணமலைக்கு இன்று பயணிகள் கப்பல் சேவை இடம்பெறும் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

450பயணிகள் செல்வதற்கு கப்பல்களில் வசதி செய்யப்பட்டுள்ளதால் சிவில் அலுவலகத்தில் பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 545 க்கு உட்பட்டவர்களை இன்று காலை 7 மணிக்கு யாழ். மத்தியகல்லூரி மைதானத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## படகு அழிப்பு என அறிவிப்பு

முல்லைத்தீவுக்குக் கிழக்கே விடுதலைப் புலிகளின் படகு ஒன்றை நிர்மூலமாக்கியதாகவும் —

ஒரு விடுதலைப் புலி உறுப்பினர் கொல்லப்பட்டார் என்றும் — பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்று அறிவித்தது.

## மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்)

துக்கு பெரும் எண்ணிக்கையில் திரண்டு வந்திருந்தனர்.

படகுகளில் வந்து சேர்ந்தவர்களைப் பதிவு செய்யும் முகமாக குருநகர் இறங்குதுறைக்கு சமீபமாக உள்ள வீடுகளில் அவர்களை நேற்று மாலை வரை படையினரால் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களை நேற்றிரவு சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தில் தங்கவைக்க குருநகர் கிராம சேவையாளர் ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

கடந்த 10 ஆம் திகதி பூநகரி பாலாவியில் இருந்து 18 வள்ளங்களில் 203 பேர் குருநகர் இறங்குதுறையை வந்தடைந்தது தெரிந்ததே. (இ-3-51)

## யாழ். நகருக்குள்..

(முதலாம் பக்கத் தொடர்)

பங்களிப்பை அதிகரிக்க வேண்டும். சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தினர் தமது பொறுப்புக்கள் சிலவற்றை அரச அதிபர் மற்றும் சிவில் அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டும்.

★ பாலியல் நிகழ்வுகள், பொதுமக்கள் காணாமற் போதல், தடுத்து வைத்தல் ஆகியவற்றுக்கு படையினர் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

★ கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்படுவோர் விவரங்களை பகிரங்கமாக அறிவிக்கவேண்டும்.

★ பாலியல் தொடர்பான விடயங்களில் ஈடுபடவேண்டாம் என்று படையினருக்கு ஜனாதிபதி, இராணுவ தலைமைப்பீடம் பகிரங்கமாகச் சொல்லவேண்டும்.

(அமெரிக்க அகதிகள் கவுன்ஸிலின் அறிக்கையின் ஒரு பகுதி நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தது.) (இ-3-150)

# பலாலியில் காவலில் உள்ளோர் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்

கொழும்பு, மார்ச் 18

யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டு பலாலியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை மல்லாகம் மஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட் டுள்ளன.

இதன்படி வாரத்தில் இரு நாள்கள் இங்கு கைதிகள் ஆஜர் செய்யப்படுகின்றனர்.

இப்படி ஆஜர் செய்யப்பட்டவர்களில் மூவர் கடந்த வாரம் விடுதலை செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டு கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் அநுராதபுரம் மஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்படுகின்றனர். (இ-5)

# எஞ்சிய பகுதிகளும் விரைவில் விடுவிப்பு

## அனுருத்த நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 18

விடுதலைப் புலிகளின் பிடியில் இருந்து 80 சதவீதமான பிரதேசங்களை பாதுகாப்பு படையினர் விடுவித்துள்ளனர். எஞ்சிய பகுதியும் விரைவில் பாதுகாப்புப் படையினரால் விடுவிக்கப்படும்.

இவ்வாறு பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்தரத்வத்த தெரிவித்துளளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னைய அரசாங்கத்தால் பதின்மூன்று ஆண்டுகள் நீடித்த யுத்தத்தை தற்போதைய அரசாங்கம் விரைவில் முடிவுக்குக் கொண்டு வரும். யுத்தத்துக்குச் செலவிடப்படும் பணம் அபிவிருத்திக்குச் செலவிடப்படும். யுத்தத்துக்கு இவ்வாண்டு நான்காயிரத்து நானூறு கோடி ரூபா செலவாகும். பொலன்னறுவையில் விமானம் ஒன்று சேதமடைந்துள்ளது. யுத்தத்தின் போது பொருள் சேதம் ஏற்படுவது இயற்கையே.

இப்படி அவர் மேலும் கூறினார். [இ-5]

## மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 18

நாவற்குளி மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் பி.முத்துலிங்கம் தலைமையில் நடைபெறும்.

யாழ். வலயம்—1 கல்விப் பணிப்பாளர் சு.இரத்தினராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ)

## வன்னிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

அரச அதிபர் கணேஷ், முல்லைத்தீவு அரசாங்க அதிபர், கிளிநொச்சி அரசாங்க அதிபர் மற்றும் வவுனியா ப. நோ. கூ. சங்க அதிகாரிகள், பிரதிநிதிகள் ஆகியோருடன் கூட்டம் ஒன்றை நடத்தினார்.

வவுனியாவில் நடைபெற்ற கூட்டத்தின் முடிவுக்கமைய 20 ஆம் திகதி தொடக்கம் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதிகளுக்கு உணவுப் பொருள்கள் அனுப்பி வைக்கப்படும்.

இது தொடர்பாக அரச அதிபர் கணேஷ் தெரிவித்ததாவது:-

உணவுப் பொருள்கள் அவசரமாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். இது ஓர் அவசர தேவையாகவும் இருக்கிறது. இதனைக் கருத்திற் கொண்டுதான் இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்விடயம் தொடர்பாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்துடன் தொலைபேசி மூலம் நேற்றுத் தொடர்பு கொண்டு வேண்டிய அனுமதியும் பெறப்பட்டுவிட்டது— என்றார். (அ-5)

## மனித உரிமைகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்றவைபவத்தில் இவர்களுக்கான நியமனக் கடிதங்களை நீதி அரசமைப்பு அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் வழங்கினார்.

பேராசிரியர் பீரிஸ் அங்கு உரையாற்றும் போது, இந்த மனிதவுரிமை ஆணைக்குழு பக்கசார்பற்ற முறையில் அமையவேண்டும் என்பதால் எதிர்க்கட்சித் தலைவருடனும் ஏனைய உறுப்பினர்களுடனும் கலந்தாலோசித்த பின்னரே இதற்கான உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர் என்று கூறினார். (இ-3-5)

## பிரிட்டிஷ் தேர்தல்

லண்டன், மார்ச் 18

பிரிட்டனில் பொதுத்தேர்தல் மே மாதம் முதலாம் திகதி நடைபெறும் என பிரதமர் ஜோன் மேஜர் அறிவித்துள்ளார்.

பிரிட்டனில் அடுத்த பொதுத் தேர்தலை நடத்துவது பற்றி பக்கிங்ஹாம் அரண்மனையில் எலிசபெத் மகாராணியுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைக்குப் பின்னர் ஜோன் மேஜர் இந்த அறிவித்தலை வெளியிட்டார்.

இதன்படி அடுத்த மாதம் முற்பகுதியில் நாடாளுமன்றம் கலைக்கப்படும்.

பொதுத் தேர்தலில்ரொனி பிளேயரின் தலைமையிலான தொழிற் கட்சி அமோக வெற்றிபெறும் என கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

அடுத்த தேர்தலில்தொழிற் கட்சி வெற்றிபெறின் பிரிட்டனில் கொன்சர்வேட்டிவ் கட்சியின் 18 வருட ஆட்சி முடிவுக்கு வரும். (இ-10)

## 20ஆம், 21ஆம் திகதிகளில் பாடசாலை

யாழ்ப்பாணம், மார்ச் 18

எதிர்வரும் 20 ஆம் 21 ஆம் திகதிகளில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறாததால், வலயம் இரண்டு கல்வித் திணைக்களத்துக்கு உட்பட்ட பாடசாலைகள் அனைத்தும் அத்தினங்களில் நடைபெறும் என யாழ். வலயம் இரண்டின் கல்விப்பணிப்பாளர் சி.சிவராசா நேற்று அறிவித்துள்ளார். (இ-3)

## கிணற்றில் விழுந்து மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

கிணற்றில் தண்ணீர் அள்ளிக் கொண்டிருந்த போது விழுந்து மரணமானதாக தெரிவித்து ஒருவரின் சடலம் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

நவாலி அரசடிப்பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் நடேசு ஜெகதீஸ்வரன் (வயது 33) என்பவரே உயிரிழந்தவராவார்.

மரணமானவர் ஒரு வலிப்பு நோயாளி எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18-03-[illegible] இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org